REGISTERED AT THE G. P. O. AS A NEWSPAPER

# ஈழகேசரி

தேசீய வார வெளியீடு

மலர் 16 | சுன்னுகம்—பார்த்திப—தை உஅ, 10-2-'46—ஞாயிறு | இதழ் 28

JAFFNA COLLEGE LIBRARY, FEB 11 1946, VADDUKODDAI, CEYLON.

# பொறுப்பற்ற தலைவர்கள்

## அரசியற் சிறுரின் அவதி

[கொழும்பு நிருபர் கடிதம்]

**த**மிழ் மக்களின் எதிர்கால வாழ்வு கௌரவமானதாகவும் முற்போக்குடையதாகவும் இருக்கவேண்டுமென நினைப்பவர்களுக்குச் சில காலங்களுக்கு முன்னர் முளை கொண்ட தமிழர் காங்கிரஸ் கடையை மூடி விட்டால் அதுவே திருப்தியை அளிக்கலாம். ஆனால் இப்போது இந்த ஸ்தாபனம் எதிர்காலத் திட்டங்களை வகுக்க மீண்டும் ஆரம்பித்துவிட்டது.

“இட்டாதாயின் வெட்டென மற” என்ற தமிழ் மகளின் உபதேசம் தமிழர் காங்கிரஸுக்குச் சரியெனத் தோன்றவில்லை. இதனால் இக்கூட்டம் தேசபக்தி நிறைந்த ஏனைய முற்போக்குச் சக்திகளுடன் சேர்ந்து ஒத்துழைக்க இப்போது கருதுகின்றது. இதில் வெற்றியுறுவதற்கு இரு முக்கிய நோக்கங்கள் நிறைவேற வேண்டுமென்பது இவர்களின் இன்றைய சித்தாந்தம். ஒன்று: தமிழ் மக்கள் ஒன்றுபடுதல். இரண்டு: தனிக்கட்சியாக நின்று தேர்தலில் ஈடுபடுதல். சொல்வது எளிது. ஆனால் அதைச் சாதனையிற் செய்வது அவ்வளவு இலேசான காரியமல்ல. இது தமிழர்காங்கிரஸின் சொந்த அனுபவம். சமபல பிரதிநிதித்துவம் வேண்டுமெனச் சன்னதம் ஆடிய இக்கட்சி ‘தொபுகடீர்’ என்று வீழ்ந்த பின்னரும் ‘அது செய்வோம்! இது செய்வோம்!’ என்று வாய்ப்பறை சாற்றுவது பேடித்தனமாகும்.

கடந்தவாரம் காங்கிரஸின் கூட்டம் யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்தபோது அதற்குச் சமுகம் அளித்த 160 பேர்களில் எனது நண்பரும் ஒருவர். அவர் இங்கு என்னைச் சந்தித்தபோது கூட்ட நடவடிக்கைகளையுங் கூறினார். அவர் கூறியதுபோலவே இங்குள்ள தினசரிப் பத்திரிகைகளும் தெரியத் தருகின்றன.

### வசை பாடாதே

**த**மிழர் காங்கிரஸ் தோல்வியடைந்தது ஒருபுறமிருக்க இப்போது தமது சகாக்கள்மீது வசைபுராணம் பாடுவது இங்குள்ளவர்களுக்குச் சிரிப்பாகவிருக்கின்றது. ஸ்ரீமான்கள் நடேசன், தியாகராஜா, இராஜகுலேந்திரன் ஆகியோர் வெள்ளை அறிக்கைக்குச் சாதகமாக வாக்களித்திருக்காவிடின் ஸோல்பெரி அறிக்கையிற் திருத்தங்கள் செய்திருக்கலாமெனத் தமிழர் தலைவரெனச் சொல்லிச் சீமைசென்று திரும்பிய வீரன் பிதற்றுகின்றார். இந்தப் பித்தலாட்டங்களை இனி நிறுத்திவிட்டுத் தமிழ் மக்களின் நம்பிக்கையைப் பெற்றிருக்கும் இலங்கைத் தமிழ்ப் பெருமககளுடன் சேர்ந்து ஆக்கவேலையில் அனைவரும் ஈடுபட வேண்டும். சுயநலத்தையும் புகழையும் விரும்புபவர்கள் அரசியற் துறையில் வெற்றியுடன் உழைக்க முடியாது. அவர்கள் மதிப்பையும் நாட்டுமக்களின் நம்பிக்கையையும் நிரந்தரமாகப் பெறுதலும் இயலாத காரியம்.

இலங்கையின் தலைவிதியை நிர்ணயிக்கும் பொறுப்பு இலங்கை மக்களிற்றான் தங்கியிருக்கின்றது. வரவிருக்கும் வருடங்கள் இதற்குச் சந்தர்ப்பங்கள் அளித்தே தீரும். தொகையிற் கூடிய சிங்களர் ஏனைய வகுப்பினரின் விரோதத்தையும் அவநம்பிக்கையையும் தேடிக்கொள்ளாது புத்தியாக நடந்து நாட்டின் விடுதலைக்கு உயிரையும் அர்ப்பணஞ் செய்யத் தயாராக வேண்டும்.

**ஸ்ரீ** சேனநாயகாவுக்குத் தன் மீது நல்ல நம்பிக்கையிருக்கின்றது. எத்தனை கட்சிகள் தோன்றினாலும் தான் நினைத்தபடியே புதிய ‘பார்லிமென்ட்’டை அமைக்கத்திட்டம் போட்டுக் கொண்டிருக்கின்றார். கட்சிகள் தோன்றினுலென்ன தோன்றாவிட்டாலென்ன பிரதம மந்திரிப் பதவி தன்னைத்தவிர வேறு எவர்க்குங்கிடையாதென அசைக்க முடியாத நம்பிக்கையுடன் இருக்கின்றார். சமீபத்தில் இவர் யாழ்ப்பாணம் வந்திருந்தபோது இந்த அபிப்பிராயத்தைத் தெரிவித்தாரென அறிகின்றேன். போதாக்குறைக்கு டெய்லி நியூஸ் பத்திரிகையும் சந்தர்ப்பங்கள் அகப்படும்போது ஸ்ரீ சேனநாயகாவைத் தட்டிக் கொடுத்து எதிர்காலப் பிரதம மந்திரி என்ற பதவியையும் இப்போதே சுமத்தவும் சுமத்துகின்றது. ஸ்ரீசேனநாயகாரகத்தைச் சேர்ந்த அரசியல்வாதிகளால் நாடு விடுதலைபெறமாட்டாதென்ற அபிப்பிராயம் இங்கு நாளாந்தம் வலுப்பெற்று வருகின்றது.

### புதிய கூப்பன்

**பு**திய புடவைக் கூப்பன்கள் இங்கு சில தினங்களாக விநியோகஞ் செய்யப்படுகின்றன. இதற்காகத் தென்பகுதி, வடபகுதி, மத்தியபகுதியெனக் கொழும்பு மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அநேக புடவைப் பரிசோதகர்களும் நூற்றுக்கதிகமான பெண்மணிகளும் இந்த வேலையைச் செய்வதற்காக இங்குள்ள பல ஐக்கிய பண்டகசாலைகளில் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். பிறவூர்களிலிருந்து இங்கு வந்துள்ள பரிசோதகர்களுக்குச் சம்பளத்துடன் நாளொன்றுக்கு ரூபா 7-50 அதிகமாக அளிக்கப்படும். பெண்மணிகளுக்கு ரூபா 3-50 குறைவு. இப்புதிய கூப்பன்கள் இவ்வருடத்துக்கும் 1947-ம் ஆண்டுக்கும் செல்லுபடியாகும்.

இக்கூப்பன்களைச் சகலருக்கும் விநியோகம் செய்வதற்கு ரூபா 180,000 செலவாகின்றது. விதானைமாருக்குக் விநியோகிக்கப்படும் கூப்பன் புத்தகமொன்றுக்கு சதம் மூன்று கிடைக்கும்.

### அரிசிக்கப்பல் வந்தது

**இ**ருகப்பல்கள் அரிசி மூட்டைகளுடன் தட்டு முட்டுப்படாமல் இங்கு வந்து சேர்ந்து விட்டன. இவை எகிப்திலிருந்தும் தென் அமெரிக்காவிலிருந்தும் வந்திருக்கின்றன. ஆகக்கூடி 10,000 தொன் நிறையிருக்கும். உள்ள அரிசியுடன் இதையுஞ் சேர்த்தால் இம்மாதம் 20-ம் திகதி முடிய இலங்கைக்கு அரிசித் தட்டுப்பாடு ஏற்படாத முறையிற் சமாளிக்கலாம்.

### போலீஸ்புலிகளுக்கு [illegible]

**பொ**லீஸ்வேலை பார்ப்பவர்களுக்கு ஆரம்பச் சம்பளம் ரூபா 50 ஆக இருக்க வேண்டுமென்ற யோசனையை மந்திரிசபை ஏற்றுக் கொண்டுவிட்டது. ரூபா 50-ல் ஆரம்பமாகி ரூபா 85 வரை வேதனம் பெறுவார்கள். உத்தியோக உடைகளும் யுத்தப்படியும் வேறு. அத்துடன் தங்குவதற்கு இலவச இல்லங்களும் இவர்களுக்கு அரசாங்கம் உதவும்

### பழையபடி

**ஜ**ப்பான் மூன்று வருடங்களுககு முன் இலங்கைக்கு அக்கினி அபிஷேகம் செய்தபோது பொருட்காட்சிச் சாலையிலிருந்து விலைமதிக்கவொண்ணாத அருமையான பொருட்கள் வேறு பல இடங்களுக்கு அனுப்பப்பட்டன. இதற்கு ரூபா 15,000 செலவாயிற்று. இணைபிரிந்த இப்பொருட்கள் விரைவில் மீண்டும் சொந்த வீட்டுக்குத்திரும்பவிருக்கின்றன. இவற்றை இங்கு மறுபடியும் தருவிப்பதற்கு ரூபா 10,000 செலவாகுமென மதிப்பிடப்பட்டிருக்கின்றது. ஏதோ இலங்கையைக் குட்டிச்சுவராக்கிவிடாது குத்துக்கரணங்கள் போட்டாற் போதும்!

### தமிழிலும் சிங்களத்திலும் தந்தி

**த**ந்திக்காரன் தந்தியைக் கொண்டு வந்து நீட்டியவுடன் அதை வாங்கிக் கொண்டு ஆங்கிலம் படித்தவர்களிடம் அவசரம் அவசரமாக ஓடவேண்டிய நிர்ப்பந்தம் இனி அநேகருக்கு ஏற்படாதுபோவிருக்கின்றது.

தமிழில் அல்லது சிங்களத்தில் எழுதிக் கொடுக்கும் தந்திச் சமாச்சாரத்தை அதே மொழிகளிற் தெரிவிப்பதற்கான ஒழுங்குகள் செய்வதிற் தபாற்பகுதித்தலைவர் முயற்சித்து வருகின்றார் என்று அறிகின்றேன். தந்திச் செய்தி அனுப்ப விரும்புபவருக்கு ஆங்கிலப்படிப்பு இல்லாதுபோனால் அவர் தாய்மொழியில் எழுதலாம். அவர் விரும்புவதுபோல் அச்செய்தி குறித்தவரைப்போய்ச்சேரும். இம்முறை வெகு விரைவிற் கையாளப் படுமெனத் தெரிகின்றது. அப்படியானாற் தபாற்கந்தோர் ‘விறாந்தை’யில் இருந்துகொண்டு இங்கிலிசுத்தந்தி எழுதிப் பிழைப்பவர்கள்பாடு இனி எக்கச்சக்கந்தான்.

### “இரகசியம்”

**இ**ந்தத் தலைப்புடன் கண்கவர் முறையில் இங்குள்ள முக்கிய வீதிகளிலும், கட்டடச் சுவர்களிலும், காரியாலயங்களுக்கு வெளியிலும் பெரிய விளம்பரத்தாள்கள் ஒட்டப்பட்டிருக்கின்றன. யாழ்ப்பாணத்திலும் திரும்புமிடமெங்கும் இதைக் காண்பீர்கள் என்று இங்கு குசாலாக இருந்துகொண்டு உறுதியாகக் கூறுகின்றேன். இலங்கையின் குடிசனத்தைச் சரியாக மதிப்பிடுவதற்காகவே அரசாங்கம் இந்த “இரகசியம்” என்ற சுவரொட்டிகளைத் துணைக்கொண்டிருக்கின்றது. இலங்கையின் பலபாகங்களிலுமுள்ள வித்தியாசாலைகளில் உள்ள ஆசிரியர்கள், மாணவர்களுக்கு இது சம்பந்தமாகப் பாடஞ் சொல்லிக் கொடுக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளனர். 1921-ம் ஆண்டுக்குப்பின் குடிசனமதிப்பு எடுபடவில்லை. எனவே, இலங்கை மக்கள் அனைவரும் இதுவிஷயத்தில் அரசாங்கத்துடன் ஒத்துழைக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இம்மாதம் 18-ந் திகதி மதிப்பெடுப்பு ஆரம்பமாகும். இதுதான் அந்த “இரகசியம்!” தெரிந்ததா?

# மாம்பலச் சம்பவங்கள்

**மா**ம்பலம் என்று சொல்லப்படும் சென்னையிலுள்ள தியாகராய நகரில் ஹிந்திப் பிரசாரசபையின் வெள்ளிவிழா சமீபத்திற் கொண்டாடப்பட்டது. காந்திஜி தலைமை வகித்தார். அங்கு நிகழ்ந்த சில ருசிகரமான சம்பவங்கள் இவை.

**எ**வனொருவன் தன்னிடமுள்ளதுபோல், உலகிலுள்ள எல்லாச் ஜீவராசிகளிடமும் என்னைக் காண்கின்றானோ அவனே ஞானி; விஷய முணர்ந்தவன். என்று கீதையில் பகவான் சொல்லி இருக்கிறார். மகாத்மா காந்தி முன்னிலையில் இது சம்பந்தமான நிகழ்ச்சி ஒன்று 22-ந் திகதி மாலை நடைபெற்றது.

கோடி சரிகை அங்கவஸ்திரம், தலைப்பாகை முதலியவைகளுடன் இருந்த ஒரு மனிதர் காந்திஜியைக் கண்டதும் கீழேகுனிந்து அவர் பாதத்தைத் தொட்டுக் கண்களில் ஒத்திக்கொள்ளப் பிரயத்தனப் பட்டார். இது காந்திஜீக்குப் பிடிக்கவில்லை. அந்த மனிதரை நோக்கி, “ஏன் இவ்விதம் செய்கிறீர்கள்?” என்று கேட்டார். அவர் பதில் சொல்லாமல் இருந்தார்.

‘நீங்கள்தானே நான். உங்களிடம் உள்ள பரமாத்மாதானே என்னிடமும் இருக்கிறார். நான் மகாத்மா அல்ல’ என்று சொல்லி விட்டு மகாத்மா சென்றார்.

பிரார்த்தனையின் போது மற்றொரு சம்பவம் குறிப்பிடத் தக்கது. இராமநாம பஜனையில் தாளம் போடவேண்டி இருக்கிறது. தாளம்போடத் தெரிந்தவர்கள் தாளம் போடலாமென காந்திஜி தெரிவித்தார். முதல் நாள் பிரார்த்தனையை ஸ்ரீ பியாரிலால் நடத்தினார். காந்திஜீ கண்களை மூடிக்கொண்டு அமர்ந்திருந்தார். தாளம் யாரோ தவறாகப் போடுவது காதில் விழுந்தது போலும். உடனே சுற்று முற்றும் நோக்கினார். காந்திஜீயின் கொள்ளுப்பேரன் 7 வயதுக்குள் இருக்கும் பாலகன் தாளம் போட்டுக் கொண்டு கண்களை இறுக மூடி இராமநாமத்தை உச்சரித்துக்கொண்டிருந்தது அவர் கண்களில் பட்டது. பக்கத்தில் இருந்தவரையும், ஸ்ரீ கனுகாந்தியையும் பார்த்து மகாத்மாசிரித்து பையனைத் திரும்பிப் பார்த்தார். பின்னர் கண்களைச் சுற்றுமுற்றும் திரும்பிப் பார்த்தார். ஸ்ரீ பியாரிலால் தாளம் போட்டுப் பாடிக்கொண்டிருந்ததையே அவர் வெகு நேரம் கவனித்துக் கொண்டிருந்தார்.

●

**பி**ரார்த்தனையின்போது காந்தம்மேல் போட்டிருக்கும் ஆடையில் கைகளை மூடியவண்ணம் தலைகீழ்ப்புறம் நோக்க கண்களை மூடிக்கொண்டு யோகத்தில் இருக்கும் தவசிபோன்று காட்சி அளிக்கிறார். அவர் கைக்குள் என்ன மூடி வைத்துக்கொண்டிருக்கிறார் தெரியுமா? ஜெபமாலை. அதை வைத்துக் கொண்டே அவர் பிரார்த்தனை சமயத்தில் தியானம் செய்கிறார். இப்படிப்பட்ட அரசியல்வாதி—சந்நியாசியை வேறு எங்காவது காண முடியுமா?

22-ந் திகதி மாலை பிரார்த்தனை முடிவடைந்தது. திரும்பி காந்திஜி சென்றபோது, ஓரத்தில் நின்றிருந்த ஒருவர் காந்திஜீ அருகில் வந்ததும் “மகாத்மா காந்திக்கு ஜே” என்று கோஷம் போட ஆரம்பித்து விட்டார். காந்திஜீ உடனே அங்கே நின்று அவரை விழித்து நோக்கினார். அந்த ஆசாமியின் உடம்பு வெடவெடவென்று நடுங்க ஆரம்பித்தது. இதைக்கண்ட காந்திஜிக்கு சிரிப்பு வந்து விட்டது. ‘பயந்துவிட்டார்’ என்று கூறிக் கொண்டு மேலே நடந்து சென்றார். காந்திஜீ ஹிந்துஸ்தானியில் சொன்னது அந்த ஆசாமிக்குப் புரியவில்லையாயினும் அவர் தம்மைப் பார்த்துச் சிரித்தவுடன் வெகு குதூகலமடைந்தார். இந்த விஷயத்தைப் பலரிடம் அந்த ஆசாமி சொல்லிக் கொண்டிருந்தார். அவர் அதைச் சொல்லும்போது முகத்தில் என்ன சந்தோஷம் தாண்டவமாடியது தெரியுமா? உலகம் புகழ் உத்தமர் தியாகமூர்த்தி மகாத்மா அவர் முன் நின்று புன்னகை புரிந்தாரல்லவா?

●

**அ**ன்று காந்திஜ கோஷ்டியிலுள்ள ஆசிரமவாசி ஒருவருக்கு ஒரு சந்தேகம் வந்து விட்டது. அவர் பெயரை வெளியிட அனுமதி எனக்கில்லை. பிரார்த்தனைக் கூட்டத்திற்குப் பிறகு அவர் என் அருகில் வந்தார். இவர் ஒரு ஸ்திரீ என்றுமட்டும் சொல்லி விடுகிறேன். “உங்களுக்குத் தமிழ் தெரியுமா?” என்று என்னிடம் ஹிந்துஸ்தானி பாஷையில் கேட்டார். தெரியுமென்று ஆங்கிலத்தில் பதில் சொன்னேன். உடனே என்குட்டு அவருக்குத் தெரிந்து விட்டது. எனக்கு ஹிந்தி தெரியாதென்று கண்டு கொண்ட அவர் ஆங்கிலத்தில் பேச ஆரம்பித்தார்.

“தமிழில் அமெரிக்கா என்றால் என்ன?” என்றார்.

“அது தேசநாடு ஒன்றின் பெயர்தான்” என்று தீர்க்கமாக நான் சொன்னேன்.

நான் கேலி செய்வதாக அவருக்குத்தோன்றவில்லை. “அதைக் கேட்கவில்லை. “தமிழ்வார்த்தை அப்படி ஒன்று இருக்கிறது” என்றார். எனக்குப் புரியாமல் விழித்தேன்.

விவரமாக இவர் சொன்னதும் உண்மை தெரிந்துகொண்டேன். பிரார்த்தனைக் கூட்டத்தில் காந்திஜீ பேசுவதை திருச்சி ஸ்ரீ. எ சுப்பிரமணியம் மொழிபெயர்க்கிறார். காந்திஜீ அமைதி ஒழுக்கம் பற்றி ஹிந்தியில் பேசுவதை இவர் தீர்க்கமாக ‘அமரிக்கையாக இருங்கள்’ என்று மொழிபெயர்த்துக் கூறுகிறார். அப்படி அவர் அடிக்கடி சொல்கிறார். என்னைக் கேட்ட ஆச்சிரமவாசிக்குத் தமிழ் தெரியாது. அவருக்கு ‘அமெரிக்கா’ என்ற பதம் நன்கு தெரியும். அதைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டார். அதன் அர்த்தம் தெரிந்துகொள்ளவே அவர் என்னைக் கேட்டிருக்கிறார்.

நான் விஷயத்தைச் சொன்னேன். அவருக்குச் சிரிப்புத் தாங்கவில்லை. இடி இடியென்று நகைத்து விட்டார்.

—தினசரி

# காந்திவழி ஆசிரியர்

## சில தினங்களாக உண்ணுவிரதம்

**ம**ஹாபோதிச் சங்கத்துடனும் கல்விப்பகுதியுடனும் ஏற்பட்ட வேற்றுமை காரணமாக அனுராதபுரத்திலுள்ள மஹாபோதிப் பாடசாலைத் தலைமை ஆசிரியர் திரு. டி. ஏ. எதிரிசிங்ஹ பள்ளிக்கூடத்திலேயே சில தினங்களாக உண்ணு விரதமிருந்து வருகிறார்.

பதினொரு மாதங்களுக்கு முன் தாம் இப்பாடசாலையின் தலைமை ஆசிரியராக நியமிக்கப்பட்டார் என்றும், அன்று தொடக்கம் இன்றுவரை தமது பதவி நிரந்தரமாக்கப் படவில்லை யென்றும் சம்பளம் இதுவரை தமக்குக் கொடுக்கப்பட வில்லை யென்றும் இதன்காரணமாகத் தாமும் தமது மனைவியும் எட்டுப் பிள்ளைகளும் பட்டினிகிடக்க வேண்டி இருக்கிறதென்றும் அதன் காரணமாகவே தாம் இந்த நடவடிக்கையைக் கையாண்டதாகவும் அவர் கூறுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கர்ண பரம்பரை

● கொண்டோடி ●

● க்ஷயரோக வைத்தியசாலையாகக் காங்கேசன்துறை ராணுவ வைத்தியசாலையை மாற்றக்கூடாதென முன்னொரு போது சுகாதார மந்திரிசபை தீர்ப்புக் கூறியது.

☼ இப்பொழுது இதற்கு 'அப்பீல்' செய்திருக்கிறார்களாம் சில சுயநலவாதிகள்.

☼ தம் பிழைப்பில் மண் விழுந்துவிடுமென அஞ்சுகின்றனராம் சில டொக்டர்மார்.

☼ அரசாங்க டொக்டர் ஒருவரும் ஊணுறக்கமின்றி ஓடித்திரிந்தாராம்.

☼ ஆங்கில தினசரிப் பத்திரிகைகளும் இவர்களுடன் சார்ந்து பல்லவிபாடத் தொடங்கின.

● சென்ற 6-ந் திகதி காங்கேசன்துறை விடுதிவீட்டில் ஒரே அமளி.

☼ விசாரணைக்காக இருவரைச் சுகாதார மந்திரி சபை அனுப்பிற்றும்.

☼ ஒரே நாளில் நடத்திமுடிக்க எண்ணிய விசாரணை மறுநாளும் நடைபெற்றதாம்.

☼ 'வேண்டாம்' 'வேணும்' என்ற தூதுக்கோஷ்டிகள் மூச்சுவிட நேரங் கொடாது மாறி மாறிப் பேட்டி கொடுத்தனவாம்.

☼ விசாரணைக்காக வந்த இருவருள் ஒருவர் அன்று பின்னேரமே றெயில் ஏறிவிட்டனராம்.

☼ மாற்றவேண்டா மென்று சொன்னோர் தொகையே கூடியதாம்,

☼ ஆனால் தீர்ப்பு எவ்வாறுமோ யார் கண்டது.

● தமிழர் காங்கிரசும் யாழ்ப்பாணத்திற் கூடிற்றும்.

☼ பழைய'ஏற்றுமதி'-'இறக்குமதி 'வேலைகள் நடைபெறவில்லையாம்.

☼ இதனாற் சிறுதொகையினரே அங்கு சமுகமளித்தனராம்.

☼ பத்திரிகைகாரர்களுக்குஇடமளிக்கப்படவில்லையாம்.

☼ நட்டாற்றில் விடப்பட்ட G. Gக்கு ஆத்திரம் வருந்தானே.

☼ தமது சகபாடிகளின் செய்கையைக் கண்டித்து வருந்தினாராம்.

☼ ஒரு படி குறைத்தோ அல்லது கூட்டியோ தமது கொள்கைகளை மாற்றத் தீர்மானித்திருக்கிறார்களாம்.

☼ ஒன்று பலனளியாவிட்டால் இன்னொன்றிற் பாய்வதுதானே, புத்திசாலித்தனமானது.

● தொழிலாளர் சங்கங்களிலும் வகுப்புவாதம் புகுந்து கொண்டதாம.

☼ இ[illegible]னச் சீமைசென்றிருந்த ஒரு வகுப்புவாத வீரர் தமது பிரசாரத்துக்குப்பயன்படுத்தினராம்.

☼ இது சுத்தப் பொய்யென இரு இலங்கைக் கொம்யூனிஷ்டுகள் அங்கு எதிர்ப்பிரசாரம் புரிந்தனராம்.

☼ இதில் எது பொய் எது மெய் என்பதை அறிவதற்குச் சீமையிலுள்ளோர் இன்னொரு தூதுக்கோஷ்டியை எதிர்பார்க்கின்றனராம்.

## புடவைக் கட்டுப்பாட்டு அறிவித்தல்

### அமெரிக்கன் மாதிரிப் (சாம்பிள்) புடவைகள்

பிளீச்ட் சற்றின் பிறின்றஸ்' ஸீற்றிங் ருவில் மூதலான 273 சாம்பிள் துணி துண்டு வாங்க தகுதிப் பத்திரம் (லைசன்ஸ்) உடைய சில்லறை வியாபாரிகளிடமிருந்து 1946-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 11-ந் திகதி வரைக்கும் ஒப்பந்தம் (tender) எம்மாற் பெற்றுக்கொள்ளப்படும். 1 துண்டின் நீளம் ¾ யார் துவக்கம் 1½ யார் வரையும், அகலம் 6" துவக்கம் 18" வரை.

கோட்டையில் டாம் வீதியிலுள்ள தகவல் அலுவலகத்தில் (Information Bureau) மாதிரிப் புடவைகள் பார்வைக்கு ஆயத்தமாய் இருக்கின்றன.

ஈ. ரெட்றிக்கோ
புடவைக்கட்டுப்பாட்டதிகாரி
புடவைக்கட்டுப்பாட்டு அலுவலகம்
ஹவலொக்றேட் வீதி,
கொழும்பு, 2-2-1946

[2640]


## சர்வதேசக் கதைமலர்கள்

ஒவ்வொன்றும் விலை சதம் 50

காதற்கதை
(இத்தாலியக் கதை)
வெற்றி (பிரஞ்சுக்கதை)
காதற்கீதம் (ரஷ்யக்கதை)
3 - கதைகள்
(ஹங்கேரியக்கதை)
துர்லக்
(செக்கோஸ்லாவியக்கதை)
இசைச் செல்வன்
(போலிஷ் கதை)
உயிர் ஆசை
(அமெரிக்கக் கதை)
வழிப்பறவைகள்
(டேனிஸ்கதை)
மணியோசை
(ஜப்பானியக்கதை)

S.S. சண்முகநாதன் & சன்ஸ்
வண்ணார்பண்ணை
யாழ்ப்பாணம்


## 28-வது இலக்கப் புடவைக் கட்டுப்பாட்டுக் கட்டளை

1945-ன் பாதுகாப்புப் (புடவைக் கட்டுப்பாடு) பிரமாணங்களில் எமக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு தற்போது நடைமுறையிலிருக்கும் புடவைக் காட்டிலுள்ள புடவைக் கூப்பன்கள் 1946-ம் ஆண்டு ஜனவரி மாதம் 31-ந் திகதிக்குப்பின் பெறுமதி அற்றதாகும் எ[illegible]க் கட்டளை இடுகிறோம்.

2. மேலுந் தற்போது நடைமுறையிலிருக்கும் முறையே 5, 10 புள்ளிகளைக் கொண்ட பிரத்தியேகக் கூப்பன்கள் 1946-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28-ந் திகதிக்குப் பின் பெறுமதி அற்றதாகும்எனக்கட்டளை இடுகிறோம்.

ஈ. ரெட்டிக்கோ
புடவைக்கட்டுப்பாட்டதிகாரி
கொழும்பு 29-1-46 [2636]

## 201-வது இலக்க புடவைக் கட்டுப்பாட்டு அறிவித்தல்

### பிரத்தியேக கூப்பன்களின் செல்லுபடி

இதுவரை வழங்கப்பட்டதும் முறையே 5, 10 புள்ளிகளைக் கொண்டதுமான பிரத்தியேக கூப்பன்கள் 1946-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28-ந் திகதி வரைக்குமே வலுவு உடையனவாகும். அவைகளை அத்திகதிக்குப் பின்னர் கடைகளில் ஒப்புக்கொள்ள மாட்டார்கள்.

2. நடைமுறையில் உள்ள பிரத்தியேக கூப்பன்களிலும் வேறுபட்ட புதிய பிரத்தியேகக் கூப்பன்கள் அச்சு இடப்பட்டுள்ளன. இனிமேல் புதுமாதிரியான பிரத்தியேகக்கூப்பன்களேவழங்கப்படும். இச்சொல்லப்பட்ட கூப்பன்களின் பின்புறத்தில் எம்மால் உரிமையளிக்கப்பட்ட உயர் அலுவலாளர் ஒருவரின் ஒப்பம் இருக்கும். புதிய பிரத்தியேககூப்பன்கள் 1, 5, 10 ஆகிய புள்ளிகளைக் கொண்டன.

3. இறக்குமதியாளர் - சில்லறை வியாபாரிகளாயும், அமெரிக்கன் புடவை வியாபாரிகளாயும் உள்ளவர்கள் உள்ளிட்டு எல்லா மொத்த வியாபாரிகளும் தங்களிடம்உள்ள பழைய மாதிரியான பிரத்தியேகக் கூப்பன்கள் எல்லாவற்றையும் புறக்கோட்டை (Pettah) யிலுள்ள கூப்பன் வைப்பகத்தில் (Bank) 1946-ம் ஆண்டு மார்ச்மீ 5-ந் திகதிக்குப் பிந்தாது ஒப்படைக்கவேண்டும்.

4. தெருவில் கூவிவிற்போர், சில்லறை வியாபாரத் தையற்காரர் உள்ளிட்டு சில்லறை வியாபாரிகள் எல்லாரும் 1946-ம் ஆண்டு மார்ச் மாதம் 10-ந் திகதிக்குப் பிந்தாது இங்கு சொல்லப்பட்ட தங்களிடமுள்ள கூப்பன்கள் முழுவதையும் கூப்பன் வைப்பகத்தில் சேர்க்கவேண்டும். காலவட்டத்தில் அப்படிப்பட்ட சில்லறை வியாபாரிகளுக்கு வேறு கூப்பன்கள் அல்லது அவற்றுக்கு இணையான சான்றேடுகள் அவர்கள் ஒப்படைத்த பிரத்தியேக கூப்பன்களுக்காக வழங்க நடபடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும்.

ஈ. ரெட்டிக்கோ
புடவைக் கட்டுப்பாட்டதிகாரி
கொழும்பு 29-1-46 [2637]


## புகையிலைப்பயிர் செய்வோர்க்கு — ஓர் விசேஷ அறிவித்தல்

# புகையிலை

கொழும்பு
கொம்மேர்ஷல் கம்பெனியார்

அநேக வருஷங்களாக எல்லாப் பயிர்களுக்கும் வேண்டிய பசளைவகைகளை விநியோகஞ் செய்பவர்களாக இருந்து வருகிறார்கள்

புகையிலைப் பயிர்ச் செய்கைக்கு அவசியமான பசளைகளைப்பற்றி விசேஷமாக அறிந்தவர்கள்

C. C. C.

பிரத்தியேக புகையிலைப் பசளைக் கலப்புகளை உபயோகிப்பதாலேயே சிறந்த செழிப்பையும் மிக உயர்ந்த லாபத்தையும் — பெறமுடியும் —

விசேஷ ஆலோசனை இலவசமாகக் கூறப்படும். எங்கள் விசேஷ விற்பனை ஒழுங்குகளைப்பற்றிய விபரங்களுக்கு உடனே எழுதவும்

கொழும்பு
கொம்மேர்ஷல் கம்பெனி லிமிற்றெட்

(பெரிய பிரித்தானியாவில் சழதாயமாக்கப்பட்டது)
(அங்கத்தவர்களின் உத்தரவாதம் மட்டுப்படுத்தப்பட்டது)

COLOMBO COMMERCIAL CO., LTD.

Incorporated in Great Britain.
Liability of Members Ltd.

[2620]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பழமை எனக்கு உற்சாகம் உண்டாக்குவதில்லை..."

# இலக்கிய மலர்ச்சி

★

வ. ரா.

> கடந்த மாதம் 30-ந்திகதி தக்ஷிண பாரத ஹிந்துஸ்தானி பிரசாரசபையின் ஆதரவில் தேசீய எழுத்தாளர்—கலைஞர் மகாநாடு நிகழ்ந்தது. காந்திஜி பிரசன்னமாயிருந்து மகாநாட்டை ஆசீர்வதித்தார். மகாநாட்டின் வரவேற்புத் தலைவர் வ. ரா. நிகழ்த்திய இச்சொற்பொழிவு, தமிழ் இலக்கியம் பிறந்து வளர்ந்த கதையாக அமைந்திருக்கின்றது. ப.-ர்.

**பழமையில்** எதுவாயிருந்தாலும் அதைப்பற்றி நினைப்பதற்கே, என் மனம் இடம் கொடுப்பதில்லை. என் மனம் கூசுகின்றது. நமது முன்னோர்கள் பண்டைக் காலத்தில், மகத்தான காரியங்களைச் சாதித்திருக்கிறார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. மறக்கவும் முடியாது. ஆனால், பின் திரும்பிப் பார்ப்பதில் அனேக இடைஞ்சல்கள் இருக்கின்றன.

என் சிறு பராயத்தில் நான் கேட்ட கதை ஒன்று என் மனதில் அழுத்தமாகப் பதிந்துவிட்டது. கதை இதுதான்.

பாரதயுத்தத்திற்குப் பிறகு, பஞ்சபாண்டவர்கள் ராஜ்ய பாரம் செய்தார்கள். இனி மண்வாழ்க்கை வேண்டாம் என்று அவர்களுக்குத் தோன்றிற்று. 'கண்ணா! இனி எங்களுக்கு இகலோக வாழ்வு வேண்டாம். நாங்கள் சொர்க்கலோகம் செல்ல விரும்புகின்றோம்' என்று பாண்டவர்களில் முதல்வர் தர்மபுத்திரன் சொன்னார். 'நல்லது அப்படியே ஆகட்டும். ஆனால் ஒரு நிபந்தனை, சொர்க்கத்துக்குச் செல்லுகையில், யாரும் பின் திரும்பிப் பார்க்கக்கூடாது. பார்த்தால், பார்த்த இடத்திலேயே கல்லாய்ச் சமைந்துபோய்விடுவார்' என்று கண்ணபிரான் திருவாய்மலர்ந்தருளினார்.

சரி என்று பாண்டவர்களும் பாஞ்சாலியும் சொர்க்கத்துக்குப் புறப்பட்டார்கள். வழியிலே, முதலிலே பாஞ்சாலியும் பிறகு யுதிஷ்டிரரைத் தவிர மற்றவர்களும் திரும்பிப் பார்த்துக் கல்லானார்கள்.

தர்மபுத்திரன் திரும்பிப்பார்க்கவில்லை. அவர்மட்டும் சொர்க்கம் சேர்ந்தார். அவரது விசுவாசம்நிறைந்த நாயும் திரும்பிப்பார்க்காமல், எஜமானுடைய காற்போக்கிலேயே சென்று சொர்க்கம் சேர்ந்தது.

## திரும்பிப் பாராதே

**வாழ்க்கையிலும்** சரி, சரித்திரத்திலும் சரி, திரும்பிப் பார்த்தால், ஸ்தம்பித்துப் போய், கல்லாவது உறுதி என்பது என் அழுத்தமான எண்ணம். முன்னேறிச் செல்பவர்கள் பின்னே திரும்பலாகாது. எனவே, பழமை என்பது எனக்கு உற்சாகம் உண்டாக்குவதில்லை. ஒன்றும் செய்யாமல் ஆத்ம திருப்தி அடைய விரும்புகிறவர்கள் தான் பழமையைப் பற்றிப் பன்னிப் பன்னிப் பேசுவார்கள்.

சொல்லிக் கொடுத்த வார்த்தையும் கட்டிக் கொடுத்த சோறும் நீண்ட காலத்துக்கு உதவுவதில்லை. ஒவ்வொரு நிலைமையும் ஒவ்வொரு சந்தர்ப்பமும் வெவ்வேறான தன்மை படைத்தவை. இப்பொழுது நிகழும்ஒன்றைப்பழங்காலத்து அதேவிதமான சம்பவத்தோடு ஒப்பிட்டுப் பார்த்து மாற்றுத் தேட முயல்வது தவறான காரியம். கையிருப்புச் சரக்கைக் கொண்டுதான் அவ்வப்போது நெருக்கடிகளைச் சமாளிக்க முடியும்; புலமையும் பழமையும் மூலபலமாக இருக்கும் என்று நம்பவே வேண்டாம்.

சமீபத்தில் நடந்த ஒரு சம்பவம். ஒரு நாள் இரவு பத்து மணிக்கு எழும்பூர் வழியாக ரிக்ஷாவில் வந்துகொண்டிருந்தேன். க்ஷயரோக ஆஸ்பத்திரிக்குத் திரும்புகிற மூலையில் ஏழெட்டு நிக்கிரோவ் சிப்பாய்கள் என்னைச் சூழ்ந்துகொண்டார்கள். சூழ்ந்துகொண்டவர்கள் நிதானத்தோடு இல்லை. குடி மயக்கம். அந்த மயக்கம் போதவில்லை என்று Where drink? (எங்கே குடிக்க கிடைக்கும்) என்றார்கள்.

கள் சாராயக்கடை இருக்கிற இடம் எனக்கு எப்படித் தெரியும்? மறியலுக்குக்கூட நான் போனவன் அல்ல, அவர்களது அசட்டு ஆவல் தணியும்படியாக ஏதாவது ஒன்று தான் சொன்னால் ஒழிய அவர்கள் இருக்கிற இருப்பில் என்பேரில் கைவைத்துவிடுவார்கள் போல் தோன்றிற்று. ரிக்ஷாக்காரன் நடுங்கின நடுக்கம் ரிக்ஷாவையே ஆட்டிக்கொண்டிருந்தது. என்ன செய்வது?

என் பண்டை நாகரிகப் பெருமையும் அதன் நினைவும் எனக்கு அப்பொழுது உதவி செய்யுமா? மூவாயிர வருஷமாக மூதிர்ந்து பக்குவமான நாகரிகத்தின் பெருமையை முதுகெலும்பில் தாங்கிநின்ற நான் பழமையும் பண்பாடும் சரித்திரமும் இல்லாத நிக்கிரோவ சிப்பாய்களுக்கு வகை பண்ணிவிட்டு வேளியேற வேண்டும்.

கையிருப்புச் சரக்குத்தான் நெருக்கடியில் உதவும் என்றேன். ஆமாம்! அந்தச் சரக்கு உதவி செய்தது. அவர்கள் கேட்ட கேள்விக்குப் பதிலாக, நான் அவர்களை வேறொரு கேள்வி கேட்டேன். எல்லாம் பாக்குக் கடிக்கிற நேரத்துக்குள் Where girl (எங்கே பெண் என்று கேட்டேன்.)

இடி இடிந்தது போல ஏககாலத்தில் அவர்கள் எல்லோரும் சிரித்தார்கள். அவர்களுடைய அட்டைக்கரி முகங்களில் உண்மையான பல் வரிசைகளைப் பார்த்தது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

ஒருவன் என்னைக் கைகுலுக்கினான். என் கை பிய்ந்து விழுந்துவிடுமோ என்று பயந்தேன். அவனுடைய வலு என்னென்று நினைக்கிறீர்கள்? அப்பா. என்னால் தாங்கமுடியவில்லை.

## வாழ்க்கையில் மாற்றம்

**பழமையின்** தொடர்பு இல்லாமற் போனால், எதிர்கால வாழ்க்கையை உறுதியாக அமைக்க முடியாது என்று சொல்லுவது எனக்கு விளங்குவதே இல்லை,

தனி மனிதனுடைய வாழ்க்கையை எடுத்துக்கொள்ளுங்கள் பம்பரம் விடுகிற பையனும் ஆள்கட்டி முகத்தில் மீசை அரும்பிவரும் பையனும் ஒரேவிதம் பேச்சுப் பேசுவதில்லை, ஆள்கட்டின இளைஞன், கல்யாணமாகும் வரையில், வரன் முறையில்லாமல் பெண் இனத்தைப்பற்றிப் பேசுகிறான். மணமான பிறகு, அவனிடம் பொறுப்பு ஏற்பட்டு, அவன் புரட்சிகரமான மாறுதலை அடைகிறான். ஐம்பது வயதுக்கு மேல், வாழ்க்கையும் அடியோடு மாறிவிடுகின்றது. சிறு பிராயத்திலிருந்து முதுமைப் பருவம் வரையில் தொடர்பு எங்கே இருக்கிறது, எப்படி இருக்கிறது என்று தெரியவில்லை. தொடர்பு இருக்கிறதாகச் சொல்லுவதும் எண்ணுவதும் Legal fiction (சட்டரீதியான கட்டுக் கதை) என்றே எனக்குத் தோன்றுகின்றது.

ஆகவே, தமிழ் இலக்கிய பழமையைப்பற்றி, நான் அதிகம் பேசாமல், மறுமலர்ச்சியைப்பற்றி, எனக்குத் தெரிந்த வரையில் சொல்லுகிறேன். அதற்கு முன், முகவுரையாக சிலவற்றைச் சொல்லுகிறேன்.

## புராதன மொழி

**தமிழ்மொழி**, ஹீப்ரு பாஷையைக் காட்டிலும் புராதனமானது. சுமார் மூவாயிரம் வருஷம் வரையில், ருசுவோடு, தமிழ்ப் பாஷையைப் பின்னோக்கிப் பார்க்கலாம். தமிழ் நாட்டின் பெரும் பாகமாகிய லிமோரி பிரதேசத்தைக் கடல் கொண்டுபோய்விட்டது என்கிறார்கள். பெரிய நஷ்டம் தான்.

ஆதி நூலாக வள்ளுவனாரின் திருக்குறளைச் சொல்லவேண்டும். குறள் உலகப் பிரசித்தி பெற்ற நூல். இகலோக வாழ்க்கைக்கு எல்லை கோலி, அதன் வழியாக எழும் அறம், பொருள், இன்பம் என்பவைகளைப்பற்றி வள்ளுவனார்வெகு அழகாக, சூத்திரங்கள் உருவத்தில் குறளைப்பாடியிருக்கின்றார்.

பிறகு, ஐம்பெரும் காப்பியங்களை குறிப்பிட வேண்டும். நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்று பாரதியார் பாடியிருக்கிறாரே, அந்தச் சிலப்பதிகாரம், படிக்கப் படிக்கத் தெவிட்டாதது. மிக உயர்ந்த காவியம்.

கம்பன் ராமாயணம் பாடினார், சிலப்பதிகாரம் ஆக்கிய இளங்கோ அடிகளுக்கும் கம்பனுக்கும் இடையே, நாயன்மார்களும் ஆழ்வார்களும் பக்திப் பாசுரங்களைப் பாடினார்கள். இவர்களுள், ஆண்டாள் என்ற பெண்மணி பாடியவை அருமையான கவிதா லக்ஷணம் அமைந்தவை. உலக இலக்கியக் காக்ஷியில், ஆண்டாளுடைய பாடல்களை வைத்து, தமிழர்கள் பெருமை அடையலாம். அதைப் போலவே, கம்பனுடைய ராமாயணமும்.

கம்பன் காலம் வரையில் தமிழ் நாட்டை யாரும் அந்நியர்கள் ஜயிக்கவில்லை. சைவ, வைஷ்ணவ, சமணப் பிணக்குகள் மட்டும் தமிழ் நாட்டில் மலிந்துகிடந்தன.

உண்மையான வாழ்வுக்கும் இலக்கியத்துக்கும் பஞ்சம் ஏற்பட்டுவிட்டன.

வாழ்க்கையை வாழாமல், வாழ்க்கையில் போராடாமல், வாழ்க்கையினின்றும் தப்பி வெளியேறி, பரலோகத்துக்குப் போக வேண்டும் என்ற ஆபாச ஆசை எந்த நேரம் இந்த நாட்டுக்கு வந்ததோ, தெரியவில்லை. தமிழர்கள் இந்த உலக வாழ்க்கையை (வழிப் போக்கர்கள் தங்கும் சாவடி) வாழ்க்கை என்று மறித்துவிட்டால், கவிதையும் கலையும் செல்வமும் அறிவும் எப்படி செழிக்க முடியும்?

கம்பனுக்குப் பின், சுமார் ஆயிரம் ஆண்டுகள், இப்படித்தான் தமிழர்கள் வாழ்க்கையை நடத்தி வந்தார்கள். இந்தியா முழுதுமே, ஹிந்துக்களின் வாழ்க்கைப் பார்வை இப்படித்தான் இந்தக் காலத்தில் இருந்திருக்கிறது. என்று சொல்லவேண்டும். எனவே, வாழ்க்கை பாழடைந்த கட்டிடமாக, பாலைவனமாக ஆகிவிட்டது.

## எதிர்பாராத விளைவு

ஆங்கில இலக்கியத்தின் மூலமாயும் ஆங்கில ஆட்சியின் மூலமாயும் ஆங்கிலேயர்கள் எதிர்பார்க்காத, அவர்கள் விரும்பாத சில விளைவுகள் ஏற்பட்டன.

தேசபக்தி, கலையில் ஆசை, கவிதையில் மோகம், ரோஷம், சுதந்திரதாகம் ஸயன்ஸின்மூலமாக அறிவைப் பெருக்க வேண்டும் என்ற ஆவல்—இவைகள் ஆங்கிலேயர்கள் விரும்பாத விளைவுகள்.

செத்த பிறகு சிவலோகம், வைகுண்டம் போவது என்ற பேச்சுமட்டுப்பட்டுக்கொண்டு வந்தது. வாழ்க்கையிற் போராடி, வாழ்க்கையை இன்பமயமாக்க வேண்டும் என்ற மாறுதல் ஏற்படும்படியான தருணத்தில், தமிழ் நாட்டின் தவப் பயனாகவும் ஹிந்துஸ்தானத்தின் கம்பீர புதல்வனாகவும் மகாகவி சுப்ரமணிய பாரதியார் தோன்றினார். [illegible] மையை அடியோடு மாற்றிவிட்டார் பாரதியார். தமிழர்களை அதட்டினார், வெருட்டினார், வெறுப்பது போல பாவனை செய்தார், தட்டிக் கொடுத்தார், அங்கலாய்த்தார், அணைத்தார், புது வாழ்வுக்குத் தன்னை அர்ப்பணம் செய்துகொண்டார். அந்த வாழ்க்கையை தெளிவுபடச் சொல்லவும் திடம்படப் பேசவும் தமிழ் மொழியையும் தமிழ் இலக்கியத்தையும் பக்குவப் படுத்திச் சீராக்கி மேன்மை அடையும்படி செய்தார்.

> கவிப் பெருக்கும் கலைப் பெருக்கும்
> மேவுமாயின்
> பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம் விழிபெற்று.
> பதவிகொள்வார்

என்று உறுதி கூறினார். ஜயமுண்டு, பயமில்லை' என்று ஜயபேரிகை கொட்டினார். தமிழர்கள் புது வாழ்வு உறுவதற்காக, அமரர் சமராதிபனான முருகனை, புவிமீதருளும்படியாக வேண்டிக்கொண்டார்.

''நாமிருக்கும் நாடு நமது என்ற பாடத்தை நன்றாக, தமிழர்களின் மனதில் புகட்டினார். 'முன்னை பார்த்தன், கண்ணன் இவர்க்கு நேராக,' தமிழர்களை உய்யக் கொண்டருளல் வேண்டும் என்று காளியை வேண்டிக்கொண்டார். வரம் கேட்கும் காளியைப் பார்த்து, 'நான் யார் என்று எண்ணினாய்' என்று பயமுறுத்தினார். மண்ணுக்கு, வெல்லத்து இனிப்பு வரச் செய்து, விந்தை தோன்றும்படி தமிழ் நாட்டை ஆக்கினார் பாரதியார்.

பாரதியார் தொட்டதையெல்லாம் அழகுபடச் செய்தார்; சக்தி மயமாக்கினார்; ஆனந்தவெள்ளம் பெருக்கு எடுத்து ஓடும்படியாகப் பாடினார்.

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)

## தாகூர் காணும் தோட்டி

முதுதமிழ்ப் புலவர் மு. நல்லதம்பி அவர்கள்

**வா**ழிதிரு நண்பாநீ வருக!நினைப் போலினியார்
மண்மே லுண்டோ?
சூழ்புவியிற் சாதியிந்து வெனவளர்வார் தோட்டியெனச்
சொல்வல நின்னைத்
தாழ்புரைத்துத் தீண்டுதற்கும் சகியாரா யருவருத்துத்
தள்ளு கின்றார்
பாழுறுத்து மிச்செயலிங் கெதற்காகப் புரிகின்றார்
பரிவில் லாதே! 1

**சு**த்தமென்றுந்தூய்மையென்றுஞ் சொல்லுமந்தப் பெரியபோருள்
தொடர்ந்து நின்னை
''மைத்துனநின் தன்னையொரு நொடிப்பொழுதும் பிரியகிலேன்
மணங்கொள்'' ளென்று
பத்தியோடுன் னடிச்சுவட்டைப் பற்றிநீ செல்லுமிடம்
பலவு(ம்) நாட
இத்தரையில் தூய்மைநல மிழந்தவனையென் றெவ்வாறிங்
கியம்பல் கூடும்! 2

**பூ**வுருண்டை யிதனையந்த வான்வழியை மக்களெலாம்
பொலிந்து வாழும்
தேவருல கெனுமாறு தூய்மையுற நறியமணம்
திகழத் தேசு
மேவுமிட மெனப்படைக்குங் கருமதே வதையாகி
விளங்கு முன்னைக்
கூவிநனி வணங்காமற் புறக்கணித்த லெவ்வாறு?
கூறு வாயே 3

**நா**மெல்லா(ம்) மீட்டுமந்தப் பழமையிலே திருந்தாத
நரர்கள் வாழ்வில்
தோமெனவீழ்ந் தவதியுறு வகையெடுத்துப் புதுமைமலி
துறக்க மென்னும்
சேமநிறை நாகரிக வாழ்வினிலே திளைக்கவைத்த
சீரோய்! நீயோ?
பூமியிதி லருவருப்போ டொதுக்கிவைக்குந் தீண்டாத
புலைய னுவாய்! 4

**தா**யொருத்தி தனதரிய மகவனமல சலந்துடைத்துத்
தாங்கி நாளும்
ஈயெறும்பு மொய்க்காமற் பறவைகள்மேற் பறவாமல்
இனிது நோக்கி
நேயமுறக் கோதாட்டி நீராட்டிக் காப்பதுபோல்
நீயு மெம்மை [றாய்
வாயில்தொறு மணைந்தணைந்து வளர்க்கின்றாய்! வளர்க்கின்
மறுபேச் சுண்டோ? 5

**ஓ**தரிய மக்களெனுங் குலத்தினுக்கு வெறுப்புநிலை
ஒருகா லத்தும்
பேதமுற விருந்ததில யெனுமரிய வாய்மையினைப்
பேணி, யாவர்
மேதினியில் நினைப்போலக் காத்திடுவர்!? நின்தகைமை
விளம்ப லாமோ?
சாதியெனுஞ் சுழல்காற்றில் அலமந்து தயங்கிடுவார்
தாங்கா னரே. 6

**சி**ந்தியுறு தெருக்களெல்லாம் பெருக்கு முன்றன்
சாத்திரசம் மதமேயான
விந்தையுறு புண்ணியமாம் வெள்ளமதி லழுக்கெல்லாம்
வீரிட் டோட
இந்தவுல குயர்புனித மெய்துகின்ற திலிபாய்நின்
னெழில்சேர் யாறும்
சிந்தையுறு புனிதநதி யெனத்திகழ்ந்து பாய்கிறது
கெடிது நன்றே. 7

**ப**ண்டொருகாற் பரமசிவன் புவியிதனைக் கொடியநச்சுப்
பகையி னின்று
கொண்டதொரு பேரருளால் மீட்கவெண்ணி வாய்மடுத்துக்
குறைதீர்த் திட்டான்
திண்டிறலாய் நீயெனிலோ அழுக்காகுங் கொடியநஞ்சைத்
தினம்போய் யாமல்
மண்டுபல துயரினிடை வாரியெடுத் துலகைநனி
வளர்க்கின் றாயே. 8

**போ**ற்றரிய தோழாவா புகலரிய வீராவா
பூவின் மீது
தோற்றிவளர் மனிதனுக்கு மனிதனருந் தொண்டுசெயும்
துணிவை நீதா
மாற்றலர்கள் மிகக்காறி யுமிழ்ந்தாலு மிகழ்ந்தாலு(ம்)
மதியா ராகிச்
சாற்றையொப்பப் பிழிந்தாலும் பணிபுரியு மாண்மைதனைத்
தருகு வாயே. 9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழகேசரி

சுன்னுகம்: பார்த். தை உ அ ெ

## இந்தியாவிற் பிரிட்டிஷார் கடமை

சுதந்திர மளிக்குங் காலத்தை இனிப் பிரிட்டிஷார் இந்தியாவிற் பின்போட வியலாதென்பது யாவரும் அறிந்த விஷயம். இவ்வருடம் முடிவடையுமுன் இந்தியா பூரண சுதந்திரத்தைப் பெறுவது நிச்சயமென மகாத்மாகாந்தியடிகள் சென்னையிற் சமீபத்திற் கூறினர். இந்தியாவுக்கு வந்த தேசாளுமன்ற விசாரணைச் சபையினர் மனப்போக்கும் அதனையே யொட்டிச் செல்கின்றது. உலக அபிப்பிராயமும் அப்படியே. இந்திய நிலையை நோக்கும் பொழுதும் வேறுவிதமாக எண்ண இடமில்லை. என்றாலும் சுதந்திரத்துக்குத் தடைபுரியும் வகுப்புவாதிகள் தமது கொள்கையை இன்னும் மாற்றியபாடில்லை. தமது எண்ணமே கைகூட வேண்டுமெனப் பிடிவாதமாக வாதித்து நிற்கின்றார் வகுப்புவாதி ஜனுப் ஜின்னு. ஆனால் இவருடைய முரட்டு வாதம் எல்லை கடந்து, அனுபவத்துக்கு விரோதமாய், உதவாதாய் விடின்-அரசினர் முதற்கொண்டு யாவரும் அதனைப் புறக்கணிக்கா திருப்ப தெப்படி?

இராசப் பிரதிநிதி வேவல் பிரபு அவர்கள் உண்மை வழியிற் செல்லத் தாம் அஞ்சுவதில்லை எனக் கூறிவிட்டனர். விரைவில் மத்திய அரசாங்கத்தைப் புதிதாக அமைக்கப் போவதாக அறிக்கை வெளியிட்டுள்ளார். அத்துடன் மாகாணச் சட்டசபையின் தேர்தல்கள் முடிவடைந்தபின் அரசியலமைப்புச் சபை (Constituent Assembly) தெரியப் படுமென வெளியாக உரைத்து விட்டார். நிச்சயமாக இவைகள் நடக்தேறுவது பற்றி ஐயமே கிடையாது. இவ் வறிக்கைகளைக் கண்டு ஜனுப் ஜின்னு கொதித்து எழும்புகின்றார். மத்திய அரசாங்கம் புதிதாய் அமைக்கப்பட வேண்டியதில்லையாம். அப்படி யமைக்கப் படினும் முஸ்லீம் சங்கத்தினர் பங்கு பற்றாராம். மேலும் அரசியல் நிர்வாக அமைப்புச் சபையிலும் தாம் பங்குபற்றுவதில்லையாம். அப்படியாயின் இரண்டு அரசியலமைப்புச் சபை ஏற்படுத்தும்படி கேட்கின்றனர். ஒன்று இந்துக்களுக்கு இந்துஸ்தானம் அமைப்பதற்கு; மற்றையது முஸ்லீம்களுக்குப் பாக்கிஸ்தானம் அமைப்பதற்கு. இவ்வாறுகப் பிரிட்டிஷ் அரசினர் செய்யாவிடின் அளவுகடந்த சங்கடங்களும் கலகங்களும் நிகழுமெனப் பயமுறுத்துகின்றார்.

இவ்வாறுகச் சிறிதும் பொருந்தாதமுறையில் வாதம் செய்யும் இவ்வகுப்புவாதியை இனியொருபோதும் திருப்தி செய்ய இயலாதென்பதை இராசப்பிரதிநிதி யுணர்ந்துள்ளார். இந்துஸ்தான், பாகிஸ்தான் என்ற இருபிரிவாக இந்தியாவைப் பிரித்து விடும்படி பிரிட்டிஷாரை ஜின்னு கேட்பதால் வரும் பயன் யாதோ? இந்திய மக்களின் சம்மதமின்றி அரசினர் எதையுஞ் செய்யப்போவதில்லை. இம்முறை இராசப்பிரதிநிதி மனவுறுதியுடன் எதையுஞ் செய்வார்போற் காணப்படுகின்றார். சிம்லா மகாநாட்டில் நடந்தபிரகாரம் எல்லாம் தமாசாக முடிய விடுவாரென நாம் நம்பவில்லை. அப்படியாயின் இவர் இப்பொழுது புதிய அறிக்கையுடன் வெளிவரமாட்டார். ஜனுப் ஜின்னுவின் கோரிக்கைகள் வரவரத் திருப்திசெய்ய வியலாத முறையில நிகழ்த்தப்படுகின்றனவே யன்றிச் சமரசத்துக்கு உதவியாகச் சிறிதுங்காணேம். இன்னமும் ஜனுப் ஜின்னுவினை வழிப் படுத்துதற்கு இடமுண்டெனக் கருதின், அது முயற் கொம்பேயாம்.

இப்போது சில மாகாணங்களில் நடந்தேறிய தேர்தலை நோக்கின் எல்லா முஸலீங்களும் இவரின் வாதத்தை அங்கீகரிக்க வில்லையென்பது புலப்படும். பாக்கிஸ்தானத்துக்குப் பெலமான ஆதரவு கிடைக்குமென நம்பியிருந்த அஸாம் மாகாணத்திலும், ஸிந்து மாகாணத்திலும் ஜனுப் ஜின்னுவின் முஸ்லீம் சங்கக் கட்சிக்குப் பெரு வீழ்ச்சி சம்பவித்துவிட்டது. அஸாம் மாகாணத்திற் காங்கிரஸ் கட்சிக்கே பெரிய வெற்றியாகும். அறுபது அங்கத்தவரைக் கொண்ட ஸிந்து மாகாணச் சட்டசபையில் முஸ்லீம் சங்கத்தினர்க்கு 27 ஸ்தானங்களே கிடைத்தன. இங்கும் காங்கிரஸ் ஆதிக்கத்தோடு கூடிய மந்திரிசபையே அமைக்கப்படுவது நிச்சயம். இன்னும் மூன்று முஸ்லீம் மாகாணங்களேயுள. அவை வங்காளம், பாஞ்சாலம், எல்லைப்புற மாகாணங்கள் என்பன. இவைகளிலாவது ஜனுப் ஜின்னுவின் கட்சிக்கு ஆதரவு கிடைக்குமென்பது திடமாகக் கூறவியலாது. விஷயமிவ்வாருக ஜனுப் ஜின்னு அவர்கள் தாமொருவரே முஸ்லீங்களின் சார்பாகப் பேசக்கூடியவரென வாய்ப்பறையடிப்பது பொய்யேயாகும்.

எனவே, பிரிட்டிஷ்தொழிற் கட்சியினர் சிறிதுந் தயங்காது இந்திய மக்கட்குப் பூரண சுதந்திரத்தை வழங்குவாராக. உலக நிலையை நோக்குங்கால் அப்படிச் செய்யாதுவிடின் உலகத்துக்கும ஏகாதிபத்தியத்துக்கும் பெருந்தீமையே வந்தெய்தும். பிழையான வழியிற் சேறும் முஸ்லீம் தலைவரின் பயமுறுத்தல்கட்குப் பிரிட்டிஷார் அஞ்சுவதென்பது நகைப்புக்கிடமாகும். யுத்தகாலத்தில் நாநாதேசங்களிலும் சமாதானத்தை நிலைநாட்டிய அரசினர், ஜனுப் ஜின்னு ஏகாதிபத்தியத்தைக் குலைத்துவிடுவரென அஞ்சுகின்றாரா? இந்தியர்க்குச் சுதந்திரத்தை விருப்பத்துடன் அளித்து அவர்களின் ஒற்றுமையையும் நட்பினையும் பெறின், அது பிரிட்டிஷார்க்கு எவ்வளவு பெரிய உசாத்துணையாகும். அளவுகடந்தவல்லமையைப் படைத்த பிரிட்டிஷார் சிறிதும் சந்தேகமும், தாமதமும் அச்சமுமின்றிச் சரியானதைச் செய்ய ஏன் பின்நிற்கின்றனரோ? ஒரு நிமிடமும் இந்திய சுதந்திரத்தைத் தாழ்த்து வைப்பது புத்தியன்று. யுத்தம் முடிவடைந்ததும் இந்தியா எத்தனையோ நன்மைகளை அடையவேண்டியிருக்கின்றது. அவற்றைச் சுதந்திரம்பெற்ற இந்தியாவே குறைவின்றிச் செய்து முடிக்கும் ஆற்றலையுடையது.

## உலக உணவுப்பஞ்சம்

### ஐந்து வல்லரசுகள் ஆலோசிக்கும்

உலகம் முழுவதிலும் உணவுக் குறைவு ஏற்பட்டுள்ள நிலைமையில் இந்தியாவில் மற்ருெரு பஞ்சம் வரும்போல் இருக்கிறது என்று உணவு மந்திரி ஸேர் பென்ஸ்மித் பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

அரிசி இறக்குமதி நின்றுவிட்டதாற் பிரிட்டிஷ் ரொட்டி அளவைக் குறைக்கப்போவதாகத் தெரிவிக்கையில், சர்வதேச உணவுப் பஞ்சம் ஏற்பட்டிருப்பதாகவும், அதைப்பற்றி ஐந்து வல்லரசுகள் முக்கியமாக விவாதிக்கப் போகின்றன என்றும் சொன்னார். இந்த நெருக்கடியைப் பற்றி நேசதேச சபைக் கூட்டத்திற்கு வந்திருந்த 5 வல்லரசுப் பிரதிநிதிகள் சம்பாஷித்தனர்.

ஸேர் பென் பாராளுமன்றத்தில் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

ஆர்ஜன்டினு, தென் ஆப்ரிக்கா, வட ஆப்ரிக்கா, ஆஸ்டிரேலியா முதலிய நாடுகளில் மகசூல் சரியானபடி இல்லை; குறைந்துவிட்டது. இந்தியாவிலும் விளைவு சரியானபடி இல்லை என்று செய்தி கிடைத்திருக்கிறது.

# பாதை ஓரத்தில்

★

## பாட்டைசாரி

**தமிழ், தெலுங்கு, கன்னட** மலையாள எழுத்தாளர்களும், கலைஞர்களும் கொண்ட மகாநாடு சமீபத்திற் சென்னை தியாகராய நகரிலுள்ள ஹிந்திப் பிரசார சபாவில் நிகழ்ந்தது. கலைஞர்கள் கூட்டத்திற் காந்திஜியுங் கலந்து கொண்டார். வரவேற்புரை நிகழ்த்தும் பாக்கியத்தை வ. ரா. பெற்றார். தமிழ் வளர்ச்சிக்குத் தொண்டு செய்த பெரியார்களை அடுக்கிக்கொண்டேபோன வ. ரா. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரைப்பற்றி ஒரு வார்த்தைதானும் சொல்லவில்லையாம். அங்கிருந்த யாழ்ப்பாண அன்பர் ஒருவரால் இது சகிக்கமுடியவில்லை. உடனே அவர்: "நல்லூர் நாவலர் அவர்கள் தமிழ் மறுமலர்ச்சிக்குத் தொண்டு செய்தாரா? இல்லையா"?... என்று ஒரு துண்டில் எழுதிக் கொடுத்தார். அதற்கு வ. ரா. "காத்திராப்பிரகாரமாகத் தாம் அப்பெயரைத் தவறவிட்டுவிட்டதாகவும் அதையிட்டு மனம்வருந்த வேண்டாம் என்றும்" கூறினுராகத் தெரிகின்றது.

கோவையில் நிகழ்ந்த மகாநாட்டிலும் வ. ரா. இதே தவறை விளைத்தார். அங்கும் இக்குறை எடுத்துக்காட்டப்பட்டது. தமிழ் இலக்கியத் தொண்டு செய்து நரைதட்டியிருக்கும் தமிழ்ப் பெரியாருக்கு:

"நல்லைநகர் ஆறுமுக நாவலர்
பிறந்திலரேல்
சொல்லுதமிழ் எங்கே சுருதி
எங்கே..."

என்பதை ஞாபகப்படுத்தி வைக்கின்றேன்!

### கலைஞரும் காந்திஜியும்

கலைஞர் மகாநாட்டிற் பிரசன்னமாக விருந்த காந்திஜி, "நானும் ஒரு கலைஞன்தான். வாழ்க்கையில் அஹிம்சையும் சத்தியமும் இசைய வாழ்வது ஒரு கலை. அந்தக் கலையை நான் இப்போது பல வருஷங்களாகப் பயின்றுவருகிறேன்" எனக் கூறியது மிகவும் பொருத்தமானது.

"சுயராச்சியம் பெறுவது ஒரு கலை. இந்திய மக்கள் அக்கலையில் முதற் பயிற்சி பெறுவது அவசியம். உங்கள் முன் இப்போது ஒரு பெரிய பிரச்னை இருக்கின்றது. இந்தியா சுதந்திரம் பெறவேண்டும். அதற்கு ஒரு வழி காட்டுங்கள் பார்க்கலாம்" என அவர் கேட்டார். பின்னர், "என்ன? இவ்வளவு எழுத்தாளரும் கலைஞரும் கூடி இருந்தும் ஏன் சுதந்திரம் வரவில்லை. இது விந்தையே!" என்று காந்தித் தாத்தா கேட்டபோது கூட்டத்தில் ஒரே சிரிப்புத்தான்!

### காச கோஷம்!

"காந்திக்கு ஜே! மகாத்மாவுக்கு ஜே!!" என்று வானமதிர கோஷிப்பதை மகாத்மா விரும்பவில்லை. இது ஜனங்களுக்குப் பெரிய ஏமாற்றம் ஆனுல் இலங்கையில் "க்ஷயரோக வைத்தியசாலைக்கு ஜே", "க்ஷயரோக வைத்தியசாலையே போ போ!!" என ஜனங்கள் போடும் கோஷம் காந்திக்கும் எட்டியிருப்பதாகத் தெரிகின்றது. இதுகாரணமாக இலங்கைப் பக்கம் போகலாமென யோசித்துக்கொண்டிருந்த காந்திஜி மதுரை மீனுட்சி அம்மனையும் பழனிஆண்டியையுந் தரிசித்துவிட்டு வார்தாவை நோக்கிவிட்டார். இலங்கை கொடுத்துவைக்கவில்லை!

### பத்திரிகைகளுக்கு ரோகம்

இலங்கைப் பத்திரிகையை எதை எடுத்துப் படித்தாலும் ஒரே காசரோக புராணந்தான். நாளாந்தம் இதைப் படிப்பதாற்பலருக்குக் காசரோகம் கண்டுவிட்டதெனத் தெரிகின்றது. இந்தமாதிரி இழுபட்டுக்கொண்டிருக்குமாகில் இலங்கையே ஒரு காசரோக கண்ணிய பூமியாக மாறிவிடும் என்று தீர்க்கமாகக் கூறலாம். அப்படியானுற் காசரோக வைத்தியசாலையைக் காங்கேசன் துறை இராணுவ வைத்தியசாலையில் அமைக்கவேண்டியதில்லை. பத்திரிகைகள் மூலம் பலருக்கும் இக் கொடிய வியாதி மும்முரமாகப் பரவிவருவதால் இலங்கை முழுவதும் இதனுற் பீடிக்கப்படுகின்றது. அப்புறம் ஒவ்வொரு மூலைமுடக்கிலும் ஒரு காசரோக வைத்தியசாலையை ஏற்படுத்தி உலுத்தன் ஒருவரைப் பெரிய டாக்குத்தராக்கிவிட்டால் அவர் சந்தி தெருவெங்கும் 'ஆள்' சேர்ப்பதை விட்டு இருமிக்கொண்டே திரிவாரல்லவா? என்ன, இதற்கிடையில் உங்களுக்குக் காசம் பிடித்துவிட்டதா?

### தடம்புரள்தல்!

இந்தக் காசரோக வைத்தியசாலை விஷயமாக இங்குள்ள சில பெரிய மனிதர்கள் நடந்துகொண்ட விதம் அருவருக்கத்தக்கது. நிலையான கொள்கை எதுவுமின்றிச் சுயநலங் கருதிச் செல்பவர்களை ஆதரித்து நீட்டுங் கடிதங்களுக்கெல்லாங் கண்ணைமூடிக் கொண்டு கையெழுத்துப் போடும் பிரமுகர்கள் காங்கேசன்துறை 'வாடி'வீட்டில் தர்மசங்கடத்துக்குள் மாட்டிக்கொண்டார்கள் என்று அறிகின்றேன். 'ஜப்பான் இலங்கைக்குக் குண்டுபோடும். காங்கேசன்துறையில் இராணுவ ஆஸ்பத்திரி கட்டப்படும். காலியானதும் காசரோக வைத்தியசாலையாக்குவதற்கு சுழியோட்டங்கள் செய்யப்படும்' என்று யார் எழுதி வைத்தார்களோ தெரியாது, இறைவாகச்சி யேகம்பனே

### சிதம்பரம் அடிச்சுவட்டில்

பத்திரிகைகளுக்கும் இந்த வி(யா)தியோ என்று சொல்லி இருமிக் கொண்டிருக்கையில் பாரதி அடிச்சுவட்டில் சௌகரியமாக நடந்துசெல்லும் இளவல் ஒருவரின் ஞாபகம் வருகின்றது. அவர்தள்ளாடாது நடந்துகொண்டிருப்பதைக் கண்டு இளவல் அடிச்சுவட்டில் ஸ்ரீமான் சிதம்பரம் இறங்கியிருக்கின்றார். சிதம்பரத்தின் துணிவைக் கண்ட சோணசலம் "நான் என்ன குறைவா" என்று சொல்லிச் சிதம்பரம் அடிச்சுவட்டில் என்ற தலைப்புடன் பின்வருவதைப் 'போஸ்கார்ட்'டில் எழுதி அனுப்பியிருக்கின்றார்:

#### சிதம்பரம் அடிச்சுவட்டில்: தொப்பி

"தொப்பியைப் பாடுகின்றேம்
இது எப்படி உண்டாயிற்று?
அதுதான் தெரியவில்லை.
இது எதிலிருந்து தோன்றிற்று?
தானே தோன்றிற்று. 'தான்' என்ற
கிடைச்சியினிடத்தே.
'இல்லை வைக்கோலினிடத்தே';
என்று'வள்வள்'என்கின்றன்சுணங்கன்.
தொப்பி நமது கண்ணுக்குத்தெரியும்
மொட்டைத் தலையை மறைக்கும்
சாட்டைபோடுவோரைச் சந்தித்தால்
முகத்தை மூட உதவும்.
'முட்டை'யை அடைகாக்கும்.
'சைக்கிள்' ஓடச் சௌகரியமாயிருக்
கும்.

தொப்பி பலப்பல
தோற்றம் பல, உலகம் உருண்டை
தொப்பி பாதி உருண்டை.
ஒரு பாகம் தட்டை
அஃது வாழ்க;"

இதை ஒருவிதமாக மோந்து பிடித்த கமலகுண்டலக் கவிராயர், தொப்பியைப்பற்றி எழுதியவர் சோணசலம் அல்ல என்றும் யாரோ ஒரு சொள்ளமுத்து எழுதியதைக் 'கொப்பி' யடித்திருக்கின்றார் எனவும்தந்திகொடுத்திருக்கின்றார். தொப்பியே! நீயுமா 'கொப்பி' அடிக்கின்றாய். பழைய சந்துவழியே செல்.

—ஜாக்கிரதை!

உலக விவகாரம்

## பாதுகாப்புச் சபை

### கிரேக்க பிரச்சினை

உலகின் முக்கிய நீதிஸ்தலமாகவும் சமரச சபையாகவும் விளங்க விருக்கும் பாதுகாப்புச் சபையின் எதிர்காலமே நெருக்கடியான நிலைமையில் இருக்கின்றது. கிரேக்கநாட்டுப் பிரச்சினை சம்பந்தமாக இரவு பகலாக விவாதம் நடைபெற்ற விடத்தும் எவ்வித முடிவும் ஏற்படவில்லை. குட்டிநாடுகளின் பிரதிநிதிகளும் வல்லரசுகளின் பிரதிநிதிகளும் கிரேக்கப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முயன்று வருகின்றனர்.

கிரேக்க பிரச்சினையிற் தலையிடாது இருப்பதுபோல் விட்டுவிடவேண்டுமென ஒரு தீர்மானங் கொண்டு வரப்பட்டது. இதைப் பெரும்பான்மையான பிரதிநிதிகள் ஆதரிக்க முன்வந்துள்ளனர். ருஷியப் பிரதிநிதிக்கு இது சிறிதளவும் பிடிக்கவில்லை. குறித்த தீர்மானம் நிறைவேறுமிடத்து ருஷியா தனது மேலதிகாரத்தை உபயோகித்துத் தீர்மானத்தை நிறுதூளியாக்குமெனவும் அவர் அட்டகாசஞ் செய்திருக்கின்றார்.

பிரிட்டனின் அயல்நாட்டு மந்திரியான ஸ்ரீ பெவின் ருஷியப் பிரதிநிதி சுமத்திய குற்றச்சாட்டுகள் அத்தனைக்குந் தகுந்த பதில் அளித்திருக்கின்றார். "எங்களைக் குற்றவாளிகள்என்று சொல்லுங்கள்; அன்றேல் நிரபராதிகள் என்று கூறுங்கள்" என்பதைப்பெவின் சதா அழுத்தியிருக்கின்றார்.

இங்கிலையில் அமெரிக்க தூதுக் கோஷ்டியின் தலைவரான ஸ்ரீ எட்வேட் ஸ்டெட்டினஸ் பாதுகாப்புச் சபையிற்கூறிய வார்த்தைகளை அறிவது அவசியமானது. "கிரேக்க நாட்டில் பிரித்தானிய துருப்புகள் இருப்பதால், அது உலக சமாதானத்துக்கு ஆபத்தாகுமென்று அமெரிக்க அரசாங்கம் கருதவில்லை. தவிர இது காரணமாக, நேச சாஸனத்தை அஸ்திவாரமாக அமைத்து பாதுகாப்பு சபை எவ்வித நடவடிக்கையும் எடுத்தல் தவறு. இது சம்பந்தமாக மேற்படி சபையானது தலையிட்டுக்கொள்வது புத்தி சாதுரியமானதல்ல. இதுவரை நடைபெற்றுவந்த சம்பவங்களுக்காக கிரீஸ், ருஷியா, பிரிட்டன் ஆதியாம் நாடுகளைப் பாராட்டுவது அவசியம்." என அவர் தெரிவித்தார்.

பாதுகாப்புச் சபையின் தலைவர் தெரிவித்த அபிப்பிராயம் சுவாரஸ்யமாக விருக்கின்றது. கிரிஸ் சம்பந்தமாக ருஷியப் பிரதிநிதி அடுக்கிக் கொண்டு போனதுபோல அங்கு நிலைமை இல்லையெனவும், ருஷியர் கருதுவதுபோல கிரேக்கர் பல்கேரியாமீதோ, அன்றேல் வேறு எந்த நாட்டின்மீதோ யுத்தம் தொடுக்கும் கருத்து இல்லையெனவும் கூறினர். தவிர ருஷியா விரும்பினுற்கூட அது அதனுல் முடியாதகாரியமெனவும், ருஷியா விஷயத்திற்தானும் கிரேக்கநாட்டுக்கு விரோதம் எதுவும் இல்லையெனவும் அங்கு பிரித்தானிய துருப்புகள் இருப்பது பாதுகாப்பைப் பொறுத்துள்ள உள்நாட்டு விஷயமெனவும் தலைவர் கிரீஸ் தகராறு சம்பந்தமாகத் தமது அபிப்பிராயத்தைத்தெரிவித்தார்.

ருஷியா பற்றி ஸ்ரீ பெவின் கூறிய வார்த்தைகள் ருஷியப் பிரதிநிதியான ஸ்ரீ விஷின்ஸ்கி அவர்களுக்கு சுருக்கென்று தைத்துவிட்டது. அவர் பழைய புராணங்களைப் படிக்கத் தொடங்கிவிட்டார். அவர் கூறியதாவது: "மொஸ்கோ பிரசாரம் என்பது பழங்கதை. 1921-ம் ஆண்டில் கர்ஸான் பிரபுவும், இப்படியே புகார் செய்தார். அவர் அத்துடன் நில்லாது இறுதி எச்சரிக்கை கொடுக்கவும் துணிந்தார். ருஷியா அனைத்தையும் வெட்டவெளிச்சமாக்கியது......."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*இந்தியா*

# சிந்து அரசியற் சிக்கல்

## சர்வகட்சி மந்திரிசபை ஏற்படும்?

**சிந்து மாகாணத்தில்** எதிர்பார்த்ததுபோல் காங்கிரசுக்கு தேசீய முஸ்லீம்களினதும் ஸ்ரீ சையத் கட்சியினரதும் ஆதரவு கிடைத்து விட்டது. இதனால் இம்மாகாணத்தில் சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்கக் காங்கிரஸ் ஆயத்தமாக இருக்கின்றது. ஏற்கனவே சிந்து சட்டசபையின் கூட்டுக்கட்சித் தலைவர் ஸ்ரீசையத் தேசாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் முஸ்லிம் லீக்கைச் சேராத முஸ்லீம்களும், காங்கிரஸ் அங்கத்தவர்களுஞ் சேர்ந்த 'கூட்டுக் கட்சி' ஒன்றினைத் தாம் அமைத்திருப்பதாகவும் அக்கட்சி தன்னைத் தலைவராகக் கொண்டுள்ளதெனவுந் தெரிவித்திருந்தார்.

ராஷ்டிரபதி ஆஜாத் தெரிவிப்பது போல ஸ்ரீ சையத், ஸ்ரீ மௌலாபக்ஷ் கட்சிகளுடன் காங்கிரஸ் சேர்ந்து கொள்வது அவசியமாகின்றது.

சிந்துமாகாணத்தில் காங்கிரஸ் தனிஸ்தானம் வகிக்க முடியாதாயிற்று. கூட்டுக்கட்சியில் முப்பது அங்கத்தினர் இருக்கின்றனர். எனவே மந்திரிசபை அமைக்கத்தக்க நிலைமையில் இக்கட்சி இருக்கின்றது. இருந்தபோதிலும் இது ஒரு விசித்திரமான நிலை என்றே கூறவேண்டும். இங்கு நிரந்தரமானதும் சக்திவாய்ந்ததுமான மந்திரிசபை அவசியமெனக் காங்கிரஸ் தெரிந்து கொண்டது. சர்வ கட்சி மந்திரிசபை ஒன்றினை அமைப்பதின் மூலமே இதனைச் செய்து முடிப்பது சாத்தியமாகும்.

**முஸ்லிம்லீக் ஒத்துழைக்கு**மாகில் லீக்குக்கும் கூட்டுக்கட்சிக்கும் சட்டசபையில் சமமான ஸ்தானங்கள் கொடுத்து மந்திரிசபை அமைப்பதைக் காங்கிரஸ் வரவேற்கும். கூட்டு மந்திரிசபை ஏற்படாது போனால் அதிகார வர்க்கத்தின் தூண்களாக மிளிரும் ஐரோப்பியக் கோஷ்டி முஸ்லிம் லீகர்களுடன் சேர்ந்து நின்று இந்தியாவின் முற்போக்குக்கு முட்டுக்கட்டை போட்டுக் கொண்டேயிருப்பார்கள். கூட்டு மந்திரிசபை உருப்படுவதை முஸ்லிம் லீக் ஒருபோதும் விரும்பமாட்டாது. மேலும் இவர்கள் ஐரோப்பியக் கோஷ்டியின் அனுதாபத்தைப் பெறுவதற்குச் சகல தந்திரங்களையுங் கையாளுவார்கள். காங்கிரஸ் இதை நன்கு அறிந்து தவறான பாதையிற் செல்லாது சாவதானமாக முயற்சி செய்து வருகின்றது.

**சிந்து சட்டசபைக் கட்சி**களின் பலத்தைத் தெரிந்து கொள்வது அவசியமாகின்றது. மொத்தம் 60 அங்கத்தினர். காங்கிரஸ் 22. சையத் கட்சி 4. மௌலாபக்ஷ் 4 முஸ்லிம்லீக் 27. வெள்ளையர் 3. சையத் மௌலாபக்ஷ் கட்சிகள் இரண்டும் காங்கிரசுடன் 30 ஆகின்றது. இதிலும் ஒரு சங்கடந்தான் உண்டாகும். 30 பேரில் சட்டசபைத் தலைவராக ஒருவர் தெரிவுசெய்யப்படுவார். மிகுதி 29. ஐரோப்பியர் கூட்டுக்கட்சியை என்றும் ஆதரித்தாற்றான் இது உயிருடன் வாழலாம்!

இதற்கிடையில் முஸ்லிம் லீக்கும் பகீரதப் பிரயத்தனங்கள் செய்து இருவர் மூவரைத் தனது கட்சிக்கு இழுத்துப் பலந்தேட முயற்சிக்கும் இரண்டு இந்துக்கள் அவர்களின் கட்சிக்குச் செல்வார்களானால் அப்புறம் சிந்து அரசியலில் எக்கச்சக்கமான நிலைதான் ஏற்படும். சிந்துமாகாணச் சரித்திரத்தில் எப்போதுமே மந்திரி சபை அமைப்பது தர்ம சங்கடமாகவேயிருந்து வந்துளது. ஆகவே, இம்மாகாணத்தில் நிலையான நிர்வாகம் ஏற்படுமெனத் தைரியமாகக் கூறமுடியாது.

காங்கிரஸ் கீழ்த்தரமான முறைகளைக் கையாள விரும்பினால் வேறு கட்சியிலிருந்து பலருக்கு ஆசைவார்த்தை கூறித் தன் பக்கம் சேர்க்க முடியும். ஆனால் இத் தேசீய ஸ்தாபனம் சத்தியத்தை அடிப்படையாகக் கொண்டு மீண்டும் இராம இராச்சியத்தை இந்தியாவில் நிலவச் செய்ய முயன்றுகொண்டிருக்கின்றது அல்லவா?

—இ. அ.

# நமது வாசிகசாலை

## சமய இலக்கியம்

'நமது வாசிகசாலை'யில் விமர்சனத்திற்கு நூல்கள் அனுப்புவோர் ஒவ்வொன்றிலும் இரண்டு பிரதிகள் அனுப்புதல் வேண்டும். மதிப்புரை விரும்புவோர் இதைக் கவனிப்பார்களாக.

**சுவாமி விவேகானந்தர்: சம்பாஷணைகள்.** மொழிபெயர்ப்பு: சுவாமி விபுலானந்தர். பிரசுரம்: ஸ்ரீ ராமகிருஷ்ணமடம், மயிலாப்பூர் சென்னை. பக்கம்: 432. விலை ரூ 3-12-0

**இந்தியாவுக்கும் இந்து சம**யத்துக்கும் புத்துயிர் அளித்த மஹா ஞானியாகிய ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய திருமுறைகள், உபந்நியாசங்கள், கடிதங்கள், குரு சிஷ்ய சம்வாதங்கள், பாடல்கள் எனும் நால்வகைகளுள் அடங்கும். இவையாவும் ஆங்கிலத்திலுள்ளன. பெரும்பகுதி பலப்பல பாஷைகளிலும் மொழிபெயர்க்கப் பட்டுள்ளன.

இந்நூல் 'குரு சிஷ்யசம்வாதங்களின்' மொழிபெயர்ப் பாகும். இவற்றை மொழி பெயர்த்தவர் பேராசிரியர் ஸ்ரீமத் சுவாமி விபுலானந்தர் அவர்கள் ஆவர். இவை, பல ஆண்டுகளுக்குமுன் ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயத்தில் வெளிவந்தன. இவையிற்றின் தொகுதியே சுவாமி விவேகானந்தர் சம்பாஷணைகள் என்னும் இந்நூலாகும்.

இந்நூல் இனிமையான செந்தமிழில் அமைந்துள்ளது. பண்டிதர்க்கும் பாமரர்க்கும் தெள்ளிதில் விளங்கக் கூடிய தன்மை வாய்ந்தது. சமயம், அரசியல், சமூக முன்னேற்றம், கல்வி என்னும் இன்னோரன்ன விஷயங்கள் சம்பந்தமான வினாக்களுக்குத் தகுந்த விடைகள்—அக்காலத்துக்கும், இக் காலத்துக்கும், எக்காலத்துக்கும் பயன்படக் கூடிய விடைகள் — சுவாமிகளால் அளிக்கப்பட்டன. அவையாவும் இதன்கண் உள்ளன. 'எல்லாப் பொருளும் இதன்பாலுள; இல்லாதன இல' எனல் மிகையாகாது. அவர் ஞானக்கண்ணுடையராதலின் யாவற்றையும் அருளினார்.

இஃது, எச் சமயத்தினர்க்கும், எத்துறைப்புகுந்து தொண்டாற்றுபவர்க்கும், இந்துசமய உண்மைகளை அறிய விரும்புவார்க்கும், தெள்ளிய தமிழில் வசனம் எழுதப்பயில்வார்க்கும் பெரும் பயன் அளிக்கும். 'இந்துக் கல்லூரிகளிலே படிப்பித்தற்குத் தகுந்த சமய நூல் உண்டா?' என்று இடர்ப்படுவார்க்கு இஃது ஓரிய வழி காட்டியாகும். தற்காலக் கல்வி முறையைச் சீர்ப்படுத்த விரும்பும் யாவர்க்கும் இது இன்றியமையாததாகும். அதிகாரங்களின் பகுதிகளாகிய ...வைப்புக்கட்கும், வசனங்கட்கும் எண் குறிப்பது நலமாகும். பொருட்குறிப்பகராதி இறுதியிற் சேர்க்கப்பட்டிராதது ஒரு பெருங்குறையே. ஒரு சில அச்சுப்பிழைகள் உண்டு; அவை திருத்தம்பெறல் வேண்டும். சுவாமிகளின் திருமுறைகளின் ஏனைய பகுதிகளும் தெள்ளிய தமிழிற் பெயர்க்கப்பட்டு வெளிவருதல் நலமாகும்.

மா. பீதாம்பரன்

•

**சைவசமய சங்கிரகம்.** ஆசிரியர்: எஸ். கதிரேசு. [A Hand Book of Saiva Religion by S. Katiresu (Red. Lawyer & Law Lecturer, Ceylon) *Printers:* Expert & Co. Triplicane, Madras. *Price* Rs. 2-8-0]

**இந்நூல் சைவத்திற்கு** அடிப்படையான கொள்கைகள் முதலியவற்றை ஆங்கிலங் கற்றவர்க்கு எடுத்துக் கூறும் நோக்கத்துடன் ஆக்கப்பெற்றது. பரம்பரை பரம்பரையாய்ச் சைவசமயிகள் கடைப்பிடித்த கோட்பாடுகள் அனுசாரங்கள் ஆகியன ஐயந்திரிபற விளக்கப்பட்டிருக்கின்றன. சிறப்பாகச் சைவத்திற்கே உரித்தான கொள்கைகளாய திரிபதார்த்த உண்மை, இறைவன் அருளின் இன்றியமையாமை, பத்திமார்க்கத்தின் பண்பு போன்றவற்றைத் தெளிவாகவும் அழுத்தமாகவும் விளக்கியிருக்கிறார் ஆக்கியோன். சைவசித்தாந்த முதல்நூலாகிய சிவஞானபோதத்தினதும் அதன் வழிவந்த சித்தியாரதும் கருத்தைச் சுருக்கமாக ஓர் அத்தியாயத்திற் கூறியுள்ளார். ஆங்கில அறிவுடையாருக்குச் சைவ சமயத்தின் தாற்பரியத்தை இலகுவாய் அறிவதற்கு இந்நூல் பெரிதும் பயன்படும்.

இதையோர் ஆராய்ச்சி நூலென்று கொள்வதற்கு அதிகமிடமில்லை. திரு. கதிரேசு இதையோர் ஆராய்ச்சி நூலாகக் கருதியெழுதவில்லைப் போலும். ஆயினும் சிலசில இடங்களிலேனும் ஆக்கியோன் தமது கூற்றுக்களுக்குச் சான்று கூறியிருந்தால் நன்றாக விருந்திருக்கும். உதாரணமாக திரு. கதிரேசு சைவமே எல்லாச் சமயங்களிலும் பழையதென்றும் சைவம் இருநூறு நூற்றாண்டுக்குமுன் தோன்றியதென்றும் கூறுகிறார். இக்கூற்றுகளுக்கு ஆதாரம் காட்டியிருந்தால் உசிதமாயிருந்திருக்கும். மேலும் திரு. கதிரேசு தமிழ்ச் சிவஞானபோதம் ரௌரவ ஆகமத்தின் ஓர் பாகமென்று கூறுகிறார். மெய்கண்டதேவர் காலம் கி. பி. 12-ம் நூற்றாண்டுவரையிலென்று திரு. ஜே. எம். நல்லசாமிப் பிள்ளை கூறுகிறார். ஏனைய சைவ சித்தாந்த சாஸ்திரங்கள் அதற்குப் பிந்தியவையே. சிவஞானபோதம் ரௌரவ ஆகமத்தின் ஓர் பாகமென்றால் மெய்கண்ட தேவர் அதைத் தமிழில் மொழிபெயர்க்குமுன் வடமொழி ரௌரவ ஆகமந்தானோ சிவவழிபாட்டில் ஈடுபட்டதமிழரது சமய சாஸ்திரமுதநூல்? அல்லதுவேறு நூல்கள் இருந்து அழிந்து பட்டனவோ? —ச, பே.

•

**பேசும்படம்** - பொங்கல் மலர் 1946. நிர்வாக ஆசிரியர்: டி. வி. ராமநாத். விலாசம்: 17/80 போண்டி பசார் தியாகராயநகர், சென்னை. விலை: ரூபா: 1—8—0

**த**மிழ்ப் பத்திரிகை உலகிற் பேசும்படம் உன்னத ஸ்தானம் வகித்து வருகின்றது. இப் பொங்கல்மலர் வழக்கமான அம்சங்களுடனும் அழகிய வர்ணப் படங்களுடனும் உயரிய முறையில் வெளிவந்திருக்கின்றது.

ஸ்ரீ. கே. சுப்ரமணியம் 'நமது தொழிலின் கௌரவம்' என்ற கட்டுரையிற் சினிமாத் தொழில் சம்பந்தமாகப் பலர் கொண்டுள்ள அபிப்பிராயம் தர்மமற்றதெனவும் சினிமா கௌரவமான ஒரு தொழிலென்பதையும் விளக்குகின்றார். பட விமர்சகர்கள் "இனியாவது சுயநலமின்றி நேர்மையான விமர்சனங்களை எழுதித் தமிழ்ப்பட அபிவிருத்திக்கு உதவ முன் வருவார்களானால் நலம்" என விமர்சக நண்பர்களை ஸ்ரீ எஸ். கே. மொஹிதீன் வேண்டிக் கொள்ளுகின்றார். கவி "கம்பதாஸன்" இம்மலரிற் பாடுவதுபோல

"ஓவியமும் காவியமும்
உயிர்ப்பின் கனவாய்,
ஒளிர்கின்ற நவரசமும்
ஒருங்கு கூட்டி
பூவிலுயர் விஞ்ஞானம்
பொலிவி னோடு"
... ... ...

பேசும்படம் பொலிந்து விளங்குவதாக.

—அரியரத்தினம்

**தேசியப் புத்தகாலயங்**களில் மிகவும் பழமையானது பாரிஸ் புத்தகாலயம். இதில் 4,00,00,000 புத்தகங்களுக்கு மேல் இருக்கின்றன. 1,25,000 கையெழுத்துப் பிரதிகளும் சுவடிகளும் உள்ளன. இதற்கு அடுத்தபடியாக, பிரிட்டிஷ் பொருட்காட்சிப் புத்தகாலயத்தைச் சொல்லவேண்டும். இங்கும் 40,000-க்கு மேல் புத்தகங்கள் உள்ளன. சம்ஸ்கிருதம், அராபி, பாரஸீகம், துருக்கி முதலிய பாஷைகளில் சுவடிகளும் கையெழுத்துப் பிரதிகளும் 56,000 இருக்கின்றன. 80,000 சுருள்களும் இருக்கின்றன. இப் புத்தகாலயத்தில் உள்ள அலமாரிகளின் நீளம் 55 மைல் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். இது கி. பி. 1700-க்கு முன்னமேயே ஏற்பட்டு 1759-ல் ஜனங்களுக்குத் திறந்துவைக்கப்பட்டது. பர்லின் நகரத்தில் உள்ள ஜர்மன் தேசீயப் புத்தகாலயம் 30,00,000 புத்தகங்கள் கொண்டது. மிகவும் உயர்ந்த கீழ்க் கலைச்சுவடிகளும் கையெழுத்துப் பிரதிகளும் 19,000 உள; இவைகள் மிகவும் முக்கியமானவை. மாஸ்கோ நகரத்திலிருக்கும் ருஷ்ய தேசீயப் புத்தகாலயம் உலகத்திலேயே மிகவும் பெரியதாகக் கருதப்படுகிறது. அதில் உள்ள புத்தகங்கள் எவ்வளவு என்று சரியாகத் தெரியாவிட்டாலும், 70,00,00-க்கும் குறையவில்லை என்று தெரிகிறது. ருஷ்யாவில் இன்னும் ஒரு தேசீயப் புத்தகாலயம் இருக்கிறது. அது லெனின்கிராட் நகரத்தில் உள்ளது; சுமார் 50,00,000 புத்தகங்கள் கொண்டது. கடைசியாக நாம் கவனிக்கவேண்டிய அமெரிக்கக் காங்கிரஸ் புத்தகாலயத்தில் 55,00,000 புத்தகங்களுக்கு மேல் இருக்கின்றன.

புத்தகாலய இயக்கம் நம் தேசத்தில் புதிதென்றே சொல்ல வேண்டும். இந்தியா சம்பந்தப்பட்டவரை அரசினரால் போஷிக்கப்படும் தேசீயப் புத்தகாலயம் ஒன்று இருப்பதாகச் சொல்லமுடியாது. ஏன் சொல்லுவதில் இவ்வளவு தயக்கம் என்றால், தேசீயப் புத்தகாலயம் என்று சொல்லக்கூடியது வெகு விசித்திரமாக இந்தியாவில் இல்லை. அது லண்டனில் இருக்கிறது. இந்தியா ஆபீஸ் புத்தகாலயம் இந்தியாவிற்கு வந்து, நம் தேசத்திற்குப் பயன்படும் வரை அப்படித்தான் சொல்ல வேண்டும். தற்காலம் இந்தியாவிலிருக்கும் மிகப் பெரிய புத்தகாலயம் கல்கத்தாவில் இருக்கும் சாம்ராஜ்ய புத்தகாலயம். இது 1902-ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்டு, 1903-ல் திறந்துவைக்கப்பட்டது. சுமார் 4,00,000 புத்தகங்கள் உள. இந்தியப் புத்தகாலய இயக்கத்திற்கு உயிரளித்து, வளரச்செய்த பெரியார்

# நூல் நிலையங்கள்

### ஏ. வி. ராமசாமி

• • •

பரோடாவிற் சமீபத்தில் அகில இந்திய நூல் நிலையங்களின் மகாநாடு நிகழ்ந்தது. நூல் நிலைய இயக்கத்துக்கு பரோடா ஒரு வழி காட்டி. இங்கு 1,400 நூல்நிலையங்களுண்டு. தவிரப் பத்திரிகைகளும் புத்தகங்களுமுள்ள 400 "யாத்திரை வண்டிகள்" ஊர்கள்தோறும் சுற்றி வருகின்றன. எங்கள் நாட்டில் நூல்நிலைய இயக்கம் இன்னும் வலுப்பெறவில்லை. இலங்கை அரசாங்கம் பரோடாவைப் பின்பற்றிச் சந்தி தெருவெங்கும் நூல்நிலையங்களை அமைக்கவேண்டும்.

"நூல் நிலையங்கள்" பற்றி அண்ணாமலைப் பல்கலைக் கழக நூல்நிலையத்தின் உதவி நிர்வாகஸ்தர் செய்த 'ரேடியோ'ப் பேச்சிற் சிறிது 'வானொலி'யிற் காணப்படுகின்றது. அது இங்கு தரப்பட்டுள்ளது. ப—ர்.

• • •

காலம் சென்ற பரோடாகெய்க்வார் மூன்றாவது சாயாஜிராவ். புத்தகாலய இயக்கத்தில் இந்தியாவில் முன்னணியில் நிற்பது பரோடா. பரோடா மத்திய புத்தகாலயம் 1910-ல் ஸ்தாபிக்கப்பட்டு 1911-ல் திறக்கப்பட்டது. சுமார் $1\frac{1}{2}$ லட்சம் புத்தகங்கள், ஐரோப்பிய அமெரிக்கப் புத்தகாலயங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் மிகவும் சிறியனவாகத் தோன்றும். ஆனால் கலை வளர்ச்சியில் நம் தேசம் இன்னும் எவ்வளவோ முன்னேற வேண்டியிருப்பதால் இவைகளை நல்ல சகுனங்களாகவே கருத வேண்டும்.

இந்தியாவில் மிகவும் அதிசயமானதும், பெருமைக்குரியதுமான ஒரு புத்தகாலயம் உள்ளது. அப் புத்தகாலயத்தை அடைந்திருக்கும் பெருமை தமிழ் நாட்டைச் சேர்ந்தது. அது தஞ்சாவூரில் உள்ள சரஸ்வதி மஹால் புத்தகாலயம். இது பதினேழாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தஞ்சாவூரை ஆண்ட தெலுங்கு நாயக்க அரசர்களால் ஸ்தாபிக்கப்பட்டது. இவர்கள் சம்ஸ்கிருத சுவடிகள் சேர்க்க ஆரம்பித்தார்கள்; அச்சுவடிகள் ஆந்திர லிபியில்உள. பதினெட்டாம் நூற்றாண்டில் மகாராஷ்டிர அரசர்கள் தஞ்சாவூரை ஆள ஆரம்பித்தார்கள். அவ்வம்சத்தில் ஒரு பெரிய கலை அரசர் தோன்றினார். அவர்தான் சரபோஜி மகாராஜா. அவர் காசிக்குச் சென்று பலவிதமான அரிய சுவடிகளைப் புத்தகாலயத்திற்குக் கொண்டு வந்து சேர்த்தார். கீழ்க்கலைகளிலும் மேற்குத்தேசத்திய பாஷைகளிலும் அவர் வல்லவர். அவரால் தமிழ் நாடு பெருமைபெற்றது. இப்புத்தகாலயத்தில் இப்பொழுது சுமார் 25,000 சுவடிகள் இருக்கின்றன. தேவநாகரம், நந்திநாகரம், ஆந்திரம், கன்னடம், கிராந்தி, மலையாளம், பஞ்சாபி, காஷ்மீரம், உரியா முதலிய லிபிகளில் சம்ஸ்கிருதச் சுவடிகளும் கையாலெழுதப்பட்ட புத்தகங்களும் உள. 8,000 பனைச்சுவடிகள் உள. இப்புத்தகாலயத்தில் உள்ள சுவடிகள் எல்லாக் கலைகளைப் பற்றியும் இருக்கின்றன, இதுவே உலகத்தில் மிகவும் முக்கியமான சம்ஸ்கிருதச் சுவடிகள் உள்ள புத்தகாலயம்.

## அடைவு விற்பனவு விளம்பரம்

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்று அடைவு பிடிக்கும் சாவகச்சேரி கந்தர்-வல்லிபுரம் அவர்களின் கடையில் 2-3-40 தொடக்கம் 1-8-44 வரை No. A. 360 தொடக்கம் 9528 வரையும் No. B. 223 தொடக்கம் 8370 வரையும் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணை தப்பிய நகைகள் மேற்படி சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

விற்பனவு 1946-ம் ஆண்டு பங்குனிமாதம் 6-ந் திகதி புதன் கிழமை காலை பத்துமணியின் மேல் எடுபட்ட நகைகள் பிற நீங்கலாக மிகுதி மேற்படியாரின் கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

[illegible]

8-2-46. வெந்தீஸ் மேஸ்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகஸ்தியர் யாத்திரை

அ. வி. மயில்வாகனம்

அன்றொருநாள் நான் அடர்ந்து படர்ந்த காடொன்றின் மத்தியில் செல்வதுபோல் இருந்தது. அக்காடு பொதியமலையின் தென்பாகத்தில் அகத்தியாஸ்ரமத்துக்கு அணித்தே இருப்பது போன்று காட்சியளித்தது. அகத்தியரைக் கண்டு ஆனந்திக்க ஆவலுடையேனாய் அலைந்து கொண்டிருந்த என்முன், நீண்டிறங்கிய தாடியும் பருத்துவளர்ந்த நகமும் முகதெளிவும் தோன்ற மிதியடியில் ஏறிக் கையில்கெண்டி தாங்கி ஒரு குறுமுனிவர் தோன்றினார். அவர் பின் அவர் மாணவர் வயதில் முதிர்ந்த இலக்கணக் கொத்தர் தொல்காப்பியரெனப் பெயருடையவர், அவரும் தோன்றினார். இவ் விருவரும் இளஞ்சிறுனாகிய என்னைக் கண்டு "மைந்தா! எந்நாட்டாய்? யாண்டுள்ளாய்?" என்று வினவினர். நான் பிரமித்துவிட்டேன். புராதன மொழி வழங்கும் புண்ணிய மூர்த்திகள் முன் பணிந்து 'அடியேன் சிறியேன் தமிழன் இந்நாட்டேன்' என்றேன். 'தமிழனாயின் நினக்கு யாதும் ஊரே, யாவருங் கேளிர்" ஆதலின் நீயும் எம்மூராய் என்றனர்.

பின்பு நாம் மூவரும் கூடிக்கொண்டு நாட்டு நடப்புப் பார்க்கப் புறப்பட்டோம். முனிவர் இருவருக்கும் ஈழநாட்டின் தற்போதைய நிலை அறிய மிக ஆவலாயிருந்தபடியால் அவர்களை நானே வழிகாட்டிச் சென்றேன். அவர்கள் இங்கிருந்து சென்று இற்றைக்கு 2500 வருடங்களுக்குப்பின்புதான் இப்படி ஒரு நாட்டு வளையம் வந்திருக்கின்றனர். "முதல் எங்கள் நாட்டைக் காணவேண்டும், வாருங்கள் யாழ்ப்பாணம் போவோம்" என்று கூட்டிச் சென்றேன். ஆங்குச் சைவரும், வைணவரும், பௌத்தரும், இஸ்லாமியரும், கிறீஸ்தவரும் சமரஸம் பேசி வாழும் தன்மையையும் பண்டிதராயினோர் தமிழன்னையின் தொண்டில் ஈடுபட்டு உழைப்பதையும் ஏனையோர் அவரையே பின்பற்றுவதையும் கண்டு களிபேருவகை புக்கார் இம் முனிசிரேஷ்டர். சில புலவர்கள், தாங்கள் இருவரும் தங்கள் இலக்கண நூலிலேயே கூறியபடி பேசிக் கொண்டனராம். தம் போன்ற பழைய மனிதரே இவரும்! என்று தாங்கள் ஐயுற்றதாகவும் இம் முனிவர் எனக்குக் கூறிச் சல்லாபஞ்செய்துகொண்டு சென்றனர். ஆனால் இவர்கள் பேச்சு ஆணித்துளையுட் சாவிபோன்று, மற்றையோருக்குப் புதிதாயிருக்குமே. மற்றையோர் தற்போதைய தமிழைத்தானே பேசுகின்றனர் என்று கேட்டார்கள். இப்படி இவர்கள் கேட்க வழிப்போக்கன் ஒருவன் இடைமறித்து "ஊருக்குப் புதிசாய்க் கிடக்குது, எங்கை போறியள், ஆர் நீங்கள்" என்று உசாவினார். முனிவர் இருவரும் இலக்கணவரம்பிகந்து வழங்கும் தமிழின் உருசியையும் ஒருசிறிது கண்டனர். "வாருங்கள் போகலாம்" என்றார் தொல்காப்பிய முனிவர். மாலையில் கொழும்புப் புகையிரதமேறி மறுநாட்காலை ஆங்குச் சென்றோம். ஒரு பெரிய பிரசங்கம் ஆங்கிலத்தில் நடைபெற்றது. 'காலி மைதானத்தில்' நகரகாவலர் தலைமையில் பழுத்த தமிழர் ஒருவர் மேலை நாகரிக வலையில் அகப்பட்டவர், பேச்சாளராக அமர்ந்தார். பேச்சின் நடுவில் "மகன் ரந்தைக் கார்ற்று முரவி இவன்ரன்னை என்னோர்ரான் கொல்லெனுஞ் சொல்" என்று அவ்வைப் பிராட்டியார் அருளினார்" என்றார். முனிவர் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துப் பல திறப்பட்ட மெய்ப்பாட்டுக் குறிகளெல்லாம் முகத்தில் தோன்றக் குறுவியர்வுடன் கோபநகை நகைத்தார்கள். இதுதான் அரைகுறைப்படிப்பின் அவலமுடிபு என்று அவர் தாமே சமாதானம் கூறிவிட்டு அப்பால் வடக்கே சென்றனர்.

நீர்கொழும்புக் கடற்கரைத் தெருவில் ஒருவன் நின்று 'கரைக் கடைத் தெருவாலே போயி, அவுங்க வீட்டே போயி செல்லியேன!" என்றான். இவன் சொல்லக் கேட்ட மற்றொருவன் "நீயி போகியே!" என்றான். இவர்கள் பேச்சைக் கேட்ட முனிவர் இருவரும் கன்னத்தில் கையால் மும்முறை போட்டுக் கொண்டார்கள். போட்டுவிட்டு "இது சிறிது காலத்தில் மலையாளிகளின் 'எந்தினாய் வந்நு' என்ற மாதிரி மாறிவிடும் போல் தோன்றுகின்றது என்று ஒருவருக்கொருவர் சொல்லிக் கொண்டு மேற்சென்றனர். நானுங்கூட!

மேற்சென்று சலாபம் அடைந்தோம். அங்கே:- "எனக்கு ஒரு பிள்ளை கிடைத்தது; பூ முடிவா? ஒரு பிஞ்சு விழுந்து; அவன் வா இருந்தது" என்று இன்னன வசனங்கள் பலப்பல நிகழும் உரையாட்டம் வீதியில் கேட்டது. என் இம் முற்றுமதலை மொழிகளை வாலிபர் தாமும் பேசுகின்றனர் என்றார்கள். "அதுதான் இவ்வூர்ப் பாஷை" என்றேன் நான். இதற்கு இலக்கணம் இல்லைப் போலும் என்று ஐயுற்றனர் முனிசிரேட்டர்கள். பின்பு இது காலத்திற் கேற்ற கோலம் என்றும் கூறி முடித்தனர்.

அவ்விடத்திலிருந்து இன்னும் வடக்கே புத்தளம் நோக்கிச் சென்றோம். வழியிற் சிற்சில குக்கிராமங்கள் தென்பட்டன. அங்கேயும் சிலர் தமிழ் போன்று ஒருமொழி பேசினர். "இது எப்பாவையாயிருக்கு; பெறிய அமாறு: காவைத் தறவேங்; சாப்பாடு லாஸ்திபண்ணு" என்றெல்லாம் கர்ணகடூரமான மொழிகள் கேட்டன. இவற்றை எல்லாம் பொருட்படுத்தாது மேற்செல்ல எத்தனித்தோம். அகத்திய முனிவர் காலிற் றீப்பட்டாற்போல விரைந்து நடந்தார். ஏன் இப்படிச் செய்கின்றார்கள் என்று அறியாமற் கேட்க வாயெடுத்தும் பயத்தினாலும் பக்தியினாலும் கேளாது விட்டுவிட்டேன். ஆனால் உய்த்துணர்ந்தேன். தமிழ்நாட்டு நிலையும் தமிழின் போக்கும் அவருக்குத் தழல்போன்று உள்ளத்தை உறுத்தி விட்டன பாவம்!

இப்படி ஓடோடியும் புத்தளமே வந்தடைந்தோம். "அவுங்க யெங்கே போறுங்கோ? யேன் போறுங்கோ? யெப்போ வந்தாங்க"? என்றெல்லாம் எங்களைப் பார்த்துச் சில இஸ்லாமியர் தம்முள் பேசிக் கொண்டனர். யாதொரு முடிவும் இல்லை. "இந்த இழவுயென்ன வெதாப்பாயிருக்கே. ஹரும் ஹரும்" என்றார்கள். முனிவர் இருவரும் "தப்பினோம் தப்பினோம்" என்று மனோவேகமாக விரைந்தோடி மலையின் உச்சியில் ஏறிக் கொண்டனர். இவர்கள் அபிப்பிராயம் அறிய ஆவலாக யானும் பின்தொடர்ந்தேன்.

"குழந்தாய் இந்தத் துன்பம் உடலை அல்ல உள்ளத்தையே வாட்டுகின்றது. இந்நிலையில் தமிழன்னை திராவிடத்தில் வாழ்தலிலும் சமைந்து அடக்கத்தில் வாழ்தல் அழகு. நாம் நாடு சிறக்கவும், மொழி வளரவும் இறுமாப்புப் பெற்றுத் தமிழரெனத் தலைதூக்கவும் முன்னேற்றம் வேண்டும். எங்கள் மாட்டுவாலின் வளர்ச்சி அழியவேண்டும். கலை ஆக்கம், தாயமொழி வழக்கு, அரசியல் ஞானம், கலாஞானம் எல்லாம் பெருக வேண்டும். நாடு கடந்து பிறநாடு குடியேறிப் பெருமை பரப்பவேண்டும். சிறியோர் பெரியோர் என்ற பாகுபாடு ஒழியவேண்டும். தமிழ்மழை எங்கும் என்றும் பொழியவேண்டும். சர்வசமய சமரசம் வாழவேண்டும் என்று முடிக்க நானும் படுக்கையினின்றும் எழுந்தேன். [illegible] காய்ச்சல்!

## விசேஷ விளம்பர வசதி

எமது பத்திரிகையில் 10 போயின்ற் (10 pt.) எழுத்துக்களில் அடங்கக்கூடியதாக, 5 வரிகளுக்குக் குறையாமலும் 15 வரிகளுக்குக் கூடாமலும் பிரசுரிக்கப்படும் சிறிய விளம்பரங்கள்—தேவை, தவறவிடப்பட்ட பொருள், பிறப்பு, இறப்பு முதலியன—வரி ஒன்றுக்கு =/25 சதம் வீதம் பிரசுரிப்பதற்கு விசேஷ வசதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இச் சலுகை ஈழகேசரிச் சந்தாதாருக்கே யுரியது.

பிரசுரத்திற்காக அனுப்பப்பெறும் எவ்விதமான விளம்பரங்களையும் மறுக்கவோ அல்லது பிரசுரித்து இடையில் நிறுத்தவோ விளம்பர அதிபருக்குரிமையுண்டு.

விளம்பரங்கள் யாவும் வெள்ளிக்கிழமைக்கு முன்னதாகக் காரியாலயத்திற் சேரக்கூடியதாக அனுப்பப்படவேண்டும்.

—விளம்பர அதிபர்

# விசித்திர உள்ளம்

ஸ்ரீமதி சித்தி கதீஜா மீரான் முஹியித்தீன்

நித்திரையில் எழுந்து நடக்கும் மனிதரைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? தங்கியிருக்கும் இடத்தில் மற்றவர்கள் யாவரும் ஆழ்ந்து உறங்கும்போது இவர்கள் நடு நிசியில் எழுந்து நடப்பர். ஏதாவது வேலை செய்வர். தாம் சினங்கொண்டுள்ளவர்க்குத் தீங்கு செய்வர். மீண்டும் வந்து படுத்துக்கொள்வர். காலையில் தாம் இரவில் செய்த கருமங்களைச் செய்யவில்லை எனச் சாதிப்பர். இவர்களுக்கு விழிப்பில் ஒரு உள்ளம், தூக்கத்தில் இன்னொரு உள்ளமா?

ஓர் குடிகாரன் மதுவின் மயக்கத்திலாழ்ந்திருக்கும் போது ஏசுகிறான்; உளறுகிறான், அல்லது சிரிக்கிறான்; மித்மிஞ்சிக் குதூகலிக்கிறான். தன் சுய அறிவை அடைந்ததும் வெறிகாரணமாகத் தானடைந்திருந்த வேற்றுமையை மறுக்கிறான். இவனுக்கும் இரு உள்ளங்களா?

ஏன் சாதாரண மனிதர்க்குப் பகலில் ஒரு சுய அறிவு! கனவு காண்பது இன்னொரு மனம்! இரவில் மனிதனை யாளும் மனம் பல் வேறிடங்களில் சஞ்சரித்துப் பற்பல விதமான இன்ப துன்பக் காக்ஷிகளை அநுபவிக்கச் செய்கிறது!

இன்னும் துர்ப்புத்தி, நற்புத்தி என இரு வெவ்வேறு புத்திகள்!

"ஆகவே மனிதருக்கு இரு மனங்கள் தானா? அப்படியானால் ஒன்று சஞ்சரிக்கும் போது மற்றது எங்கு போகிறது? இரண்டும் ஒன்றுக் கொன்று மோதிக் கொள்வதில்லையா?" இவை நியாயமான வினாக்களே.

சித்தத்தை ஆழமான சாகரத்துக்கு ஒப்பிட்டிருக்கின்றனர் பெரியோர். தாயுமானவரும் "கந்துகமதக் கரியை வசமாய் நடத்தலாம்" என்னும் பாடலில் "சிந்தையை யடக்கியே சும்மா விருக்கின்றதிறமரிது" என்கிறார். இத்தகைய நூதனமான உள்ளத்தையே நாம் ஒவ்வொருவரும் உடையோம். நம் ஒவ்வொருவருக்கும் இரு சித்தங்கள் என்று கூறும்போது அது சரியெனத் தோன்றவில்லை. சிறந்த அறிவாளிகளும் "சித்தம்" என்று கூறுகின்றனரேயன்றி 'சித்தங்கள்" என்று சொல்வாரில்லை.

## சித்தமும் கற்பனையும்

நாம் மேற்கூறிய உதாரணங்களையே இங்கும் எடுத்துக் கொள்வோம்.

சரீரத்துக்கும் சித்தத்துக்கும் ஆறுதலவசியமாகையினால் இயற்கை நித்திரையைக் கட்டாயப்படுத்துகின்றது. இவ்வாறுதலை நாம் அநுபவிக்கும்போது நம் முணர்வு ஓரளவு நம்மைவிட்டகன்றிருக்கின்றது. பின் விழிப்புவரும்போது சகல உணர்வையுமடைகின்றோம்.

ஆகவே நித்திரை புரியும்போதே தன்னுணர்வின்றி ஒரு மனிதன் எழுந்து தன் கருமங்களைக் கொஞ்சநேரத்துக்காவது கவனிப்பதெங்கனம்?

ஓர் குடிகாரன் மதுமயக்கத்தாற் கூறும் கெட்டவார்த்தைகளையும் துர்நடத்தையையும் நோக்கி, "அவனுக்குத் தன்னறிவில்லை," என்று கூறுகிறோம். ஆனால் தன்னறிவு கெட்டவன் தன் சிநேகிதனுடனன்றி, எதிரியுடன் எங்ஙனம் சண்டைக்குப் போகிறான்? "அறிவு கெட்டவனுக்கு வெட்டவும், குத்தவும், ஏசவும் மட்டும் அறிவு எங்கிருந்து வருகிறது? அதேநேரத்தில் அவனுடன் சண்டைக்குப் போகாமல் ஆதரவாக இனிய வார்த்தைகள் பேசுவோரை அவன் ஏன் ஏசவில்லை; குத்தவில்லை, வெட்டவில்லை?

இன்னும், சில சமயங்களில் எங்கள் நித்திரை குழம்பிவிடுகிறது. எவ்வளவுதான் தெண்டித்தாலும் நித்திரை வர மறுக்கிறது. "கட்டாயம் இதோ நித்திரை கொள்வேன்." என்று எண்ண, எண்ண, தூக்கம் அணுகுவதேயில்லை. ஆனால் உடனே நித்திரையைப்பற்றி நினைக்காமல் வேறு எண்ணத்தை மனதிற் புகுத்த அல்லது ஓர் புஸ்தகத்தை வாசிக்கத் தொடங்கினால் தூக்கம் தானாகவே வருகிறது! இது எப்படி?

இப்படியாக நாம் ஆராய்ந்து கொண்டு போகும் போது இருவித சித்தங்கள் இல்லை எனவும் ஆனால் நம் ஒரேமனதை இரு விதங்களாகப் பிரிக்கலாம் எனவும் உணர்கிறோம்— ஒன்று உறுதியான சித்தம்; மற்றது கற்பனை.

சித்தம் எப்போதும் நம்மால் உணரக்கூடியது. கற்பனை மறைந்திருக்கிறது. சித்தத்தாலேயே நாம் சகல தீர்மானங்களையும் செய்கிறோம். அது உத்தரவிட நாம் பணிகிறோம். அது எஜமானன்; நாம் வேலையாளர். ஆனால் இந்தச் சித்த எஜமானன் கற்பனைக்குக் கீழ்ப்படிந்தவனே.

உதாரணமாக, நம் வீட்டுக்கிணற்றுக் கட்டுக்குமேல் குறுக்காக ஒரு பழைய இறந்துபோன சலாகை போடப்பட்டிருக்கிறது. அந்தச் சலாகையில் நடந்து கிணற்றைக் கடக்கச் சொன்னால் யார் துணிவர்? கிணற்றுக்குள் விழுந்தால் மரணம். சலாகையோ பழையது. நாம், "முடியுமா முடியாதா" என யோசிக்கும் போதே ஒருவன் முன்வந்து "என் தயக்கம்? நடந்துதான் பாருங்களேன்" என உசார்ப் படுத்துகிறான். நம் மனம் உறுதிப் படுகிறது. "இதுபெரியகாரியமா? கட்டாயம் நடந்தே தீருவோம்," எனத் தீர்மானிக்கிறோம். கிணற்றுக்கட்டில் ஏறியும் விடுகிறோம். ஆனால் இன்னொரு மனம் "ஏறாதே, விழுவாய்," என எச்சரிக்கிறது. அது எங்கிருந்து வந்தது? அதுதான் கற்பனை. சித்தம் கற்பனைக்குப் பணிகிறது!

நித்திரையில் எழுந்து வேலைசெய்பவனின் சித்தம் நித்திரையிலிருக்க, கற்பனையின் தூண்டுதலினால் அவன் நடமாடுகிறான். மீண்டும் சித்தம் விழிக்கக் கற்பனை ஒளிந்து கொள்கிறது. ஆகவே சுய விழிப்பில் ஆதாவது சித்தவிழிப்பில் கற்பனையின் நடமாட்டத்தை அவன் மறக்கிறான்—குடிகாரன் விஷயமும் இதுவே.

இனி நித்திரை வரவேண்டும், வரவேண்டும் என்று நம் சித்தம் தீர்மானிக்க நித்திரை வர மறுக்கிறது. ஆனால் பிடிவாதமான தீர்மானத்தை மறைத்துக் கற்பனையை உபயோகிக்க உறக்கம் தானாகவே வருகிறது. இதெப்படியெனில் இரு எதிரிகள் ஒருவரிருக்குமிடத்துக்கு மற்றவர் வர மறுப்பது போலாகும். ஆனால் இவ்விரு எதிரிகளையும் ஒன்றுசேர்த்துச் சந்தோஷமாக்கும் மனிதனே புத்திக்காரன்; கெட்டிக்காரன். நித்திரை கொள்ளவேண்டும் என்ற எண்ணத்தை மனதில் வைத்துக் கொண்டு அதைப் பற்றிப் பிடிவாதமாயிராமல், தன் கற்பனையை உபயோகித்து உறக்கத்தை வரப்பண்ணுபவனே கெட்டிக்காரன் — இதுவே மனதை அடக்கி ஆள்வதென்பதும்.

கற்பனை கடிவாளமிடப்படாத ஒரு குதிரையை ஒத்தது. அதற்குத் தகுந்த முறையில் கடிவாளமிட்டு நம்மை ஆளவிடாமல் நாம் அதை ஆண்டால் "கந்துகமதக்கரியையும் வசமாய் நடத்தலாம்;" "இயலாது" என்ற பதத்தை அகராதியினின்று நெப்போலியன் கூறியதுபோல், அழிக்கலாம்.

இப் பத்திரிகையில் வெளியாகும் ஹாஸ்யக் கட்டுரைகள், கதைகளில் வரும் பெயர்கள் கற்பனைப் பெயர்களே. கட்டுரையாளர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.

SAMUEL SONS & Co., Ltd.,
HOSPITAL ROAD, JAFFNA
T'GRAM: ECHIRON T'PHONE: 62
Head Office:- 371, OLD MOOR ST.,
COLOMBO

இரும்பு
கம்பிகள்
கேடர்கள்
சிலாகைகள்
அச்சுகள்
தகடுகள்

நீர் இறைக்கும்
யந்திரங்கள்
குழாய்கள்
தாங்கிகள்

கல்வனேஸ்
தகடுகள்
தாங்கிகள்
வாளிகள்

கைத்தொழிற்குரிய
ஆயுதங்கள் மற்றும்
கமத்தொழிற்
கருவிகளும்

பித்தளை
தகடுகள்
பூட்டுகள்
பிணைச்சல்கள்

மைவகைகள்
மை எண்ணெய்
வாணிஸ்

சகாயமான விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்
இலவச விலை விபரங்களுக்கு எழுதவும்

சாமுவேல் சன்ஸ் & கம்பெனி லிமிரெட்
ஆஸ்பத்திரி ரோட் : : யாழ்ப்பாணம்
தந்தி: 'எச்அயர்ன்' 'போன்: 62
[2059]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கைச் சித்திரம்

# நான்

சிறுமி

என்னை எல்லாரும் "லக்ஷ்மீ! லக்ஷ்மீ!!" என்று அழைக்க வேண்டும் என்று எனக்கு மிகவும் ஆசை. நீங்கள் அந்தப் பெயராலேயே என்னை அழைக்க வேண்டும்.

ஒரு ஊரிலே பிறக்கும் எல்லாக் குழந்தைகளின் அம்மா எல்லாரும் தங்கள் குழந்தைகளுக்கு 'சுபாஷ்' என்று பெயர் இடுகிறார்களாம்.

அப்படி என்னையும் 'லக்ஷ்மீ' என்று அழைத்தால் என்ன?

"பெயரைப் பார் பெயரை! லக்ஷ்மி! யாரது 'காப்டன்' லக்ஷ்மியா? பிரம்பைக் கண்டாலே முழி பிதுங்கிப்போகும் உனக்குப் பெயராடீ லக்ஷ்மீ?; வீரம்! தட்டுக்கு எத்தனையடீ உங்கள் ஊரில்"? என்று கேலிபண்ணுகிறான் அண்ணா.

எப்படி! வீரம் என்றால் என்ன என்று 'அவனு'க்கு எங்கே தெரியப்போகிறது! வீரம் தன்னிலே பிறக்கும் என்பது அவனுக்கு விளங்காது.

அன்றைக்கு, பையன்கள் எல்லாரும் "கூ, கூ..." "ஐயோ! ஐயோ" என்று அலறிக்கொண்டு ஓடினார்கள். என்னடா என்று பார்த்தேன். ஐயோ பொன்னர் வீட்டு வெறிபிடித்த காளை அண்ணாவை முட்டி வீழ்த்தி, கொம்பினால் உருட்டுகிறது. ஒரு காகம் குருவி பக்கத்தில் இல்லை. எல்லாரும் பறந்துவிட்டார்கள்.

"அண்ணா! ஐயையோ......!" கையிலே கிடைத்த ஒரு விறகுக் கட்டையைக் கொண்டு ஓடினேன். அதன் தலை நொறுங்கும்படி ஓங்கி ஒரு அடி போட்டேன்! பாவம்! அது பின்னுக்குப் போய் மீண்டும் எங்கள்மீது பாயமுந்தி பாய்ந்து பதுங்கி ஒளிந்து கொண்டோம்.

அன்று நான் இல்லாவிட்டால் அண்ணா பிழைத்திருக்க மாட்டான் என்று எல்லாரும் சொல்லுகிறார்கள்.

அதனுடைய வெறிபிடித்த கண்களும், குடல் எடுக்கும் கொம்புகளும்! நீங்கள் கண்டாலே நடுங்குவீர்கள்!

என்னைப் பயங்கொள்ளி என்கிறான் அண்ணா!

தன்னைப்போல, முரட்டுத்தனமாகப் பையன்களுடன் வலியச் சண்டைபோட்டு வெற்றி எடுக்கும் தன் சண்டித்தனந்தான் பெரிய வீரமாம் அவன் மக்கு மூளைக்கு!

நான் சாதுவாம். அது சரி; நான் சாதுதான். மறுக்கவில்லை. எங்கள் வீட்டுப் பசு இருக்கிறதே "நந்தினி". அதுவும் கூட மிகவும் சாது! அடி! உதை! பட்டினிபோடு! அல்லது செல்லம் கொடு! அது சாதுவே சாதுதான்!

அப்படியென்றால் நந்தினிமாட்டைத் தன் தங்கையாக வைத்துக் கொள்ளட்டும் அண்ணா.

சாது என்றால் கையாலாகாதவர்கள், பேடிகளா?

தரும புத்திரர் கோடானுகோடியே கோடானுகோடி சாது! மகா பாரத யுத்தம் ஆகிய மகா உலக யுத்தம் நடத்தினாரே அவர் ஏன்?

இராமர் அவதார மூர்த்தி. விரும்பிய எல்லாம் கொடுப்பவர். இராவணன் விரும்பிக்கொண்டு போன சீதையை அவனுக்குக் கொடுக்காமல் ஏன் சண்டை செய்தார்?

இப்படிப் பலவாறு யோசித்துப் பார்க்கிறேன்.

"உயிர் போனாலும் சரி சரியானதைத் தைரியமாகச் செய்வேன், சத்தியத்திற்குப் போராடுவேன்." என்று துணிவுடன் நடப்பது தான் வீரம் என்று எனக்குத் தோன்றுகின்றது. இது சரியா?

வீரருடைய பெயரைச் சொன்னாலே நரம்புகளிலே வீரம் கதிக்கும். பெருமை தாங்காது இல்லையா?

"லக்ஷ்மி" என்று அழைக்கச் சொன்னேன். ஏன் என்று தெரிந்ததா? இப்போது?

'காப்டன்' லக்ஷ்மி மாத்திரமில்லை. ராணி லக்ஷ்மி, விஜய லக்ஷ்மி எல்லாரும் யாராம்? நான் வளர்ந்த பிற்பாடு எப்படி ஆகிறேன் என்பதை அண்ணா இருந்து பார்க்கட்டும்!

எனக்குச் சிரிப்பு வருகிறது! அண்ணாவின் வீரத்தை நினைக்கச் சிரிப்பாக வருகிறது!!

மகா பயங்கரமான சாம்பல் வெளி! மயானம்! மகாமயானம்!! நேற்று இந்த மகாமயானம், ஆ! அழகான அமராவதி நகராக இருந்தது. 'அம்மா! அப்பா!!" என்று ஆசையோடு குழந்தைகள் கொஞ்சினார்கள். அக்கா, அண்ணா, தாத்தா, பாட்டி மாமா, மாமி எல்லாருக்கும் எவ்வளவு அன்பு! எவ்வளவு ஆசை!

நேற்று இருந்தார்கள். இன்று அவர்கள் எங்கே? இருக்கிறார்கள்! இதோ! இங்கே!! மண்ணோடு மண்ணாகி, சாம்பலாகி இதோ இருக்கிறார்கள்!!! "ஹீ ஹி ஹீ......! பாருங்கள் எங்கள் வீரம்!!" என்று மார் தட்டுகிறார்கள் சிலர்.

"அபயம்! அபயம்!! ஐயோ! நீதி இல்லையா?" என்று தீனக் குரலில் கதறுகிறார்கள். ஏழை மக்கள்.

"ஏய்! கழுதைகளே!! மூடு வாய்" என்று சுட்டுத் தள்ளுகிறார்கள் சில பேர்.

இதெல்லாம் கூட மஹா வீரமாம்! எனக்கு என்னவோ இதை "குண்டு வீரம்" என்று அழைக்கத் தோன்றுகிறது.

எனக்கு இந்த குண்டு வீரத்தை நினைத்தாலும் சிரிப்பு வருகிறது.

அண்ணாவின் சண்டி வீரத்தை நினைத்தாலும் சிரிப்பு வருகிறது.

---

மலாய அன்பர்களுக்கு—VII :: "சுயா"

# இந்தியாவுக்குப் போகின்றார்கள்

இதைக் கண்டதும், என்ன, இது! இலங்கையில் ஏதும் யுத்தம் தொடங்கிவிட்டதோ, அல்லது சிங்களவர் தமிழர் கலகமோ? எதுக்கு எல்லாரும் இந்தியாவுக்கு ஓடுகின்றார்கள்? நாங்கள் எங்கள் பெண்டு பிள்ளைகளை, இந்தியாவிற்றான் போய்த் தேடவேண்டுமோ' என்று இப்படியெல்லாமெண்ணிப் பயந்து விடுவீர்களாக்கும். அப்படியொன்றும் இங்கே நடந்துவிடவில்லையென்றும், நீங்கள் ஒன்றுக்கும் கலங்கவேண்டாமென்றும் முதலில் உங்களுக்கு அபயமளிக்கின்றேன். வேறொன்றும் இல்லை; எங்களாட்கள் இந்தியாவுக்குப் போய் வருவதைப் பற்றித் தான் உங்களுக்குச் சொல்லப் போகின்றேன்.

இந்த யுத்தம் தொடங்கியதும் "நாங்களும், எங்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்களும், இந்த யுத்தத்தில் உயிருடன் தப்பிவிட்டால், சேது சிதம்பரம், இராமேஸ்வரம் முதலிய இடங்களுக்கு யாத்திரை போவேமென்றும், அங்கே ஏழை எளியவர்களுக்கு வேண்டும் தான தர்மம் செய்வோம்" என்றும் சிலவேளை நீங்கள் நேத்திக்கடன் பண்ணி வைத்து, இங்கே வந்ததும், இந்தியாவுக்குப் போய்வர ஆயத்தஞ் செய்வீர்களாயிருந்தால், அப்படி நீங்கள் போகுங் காலத்தில், இந்திய சகோதரர் உங்களை எப்படி நடத்துவார்களென்பதை நீங்கள் முதலில் அறிந்து வைத்திருக்க வேண்டுமென்பதற்காகவே இதை உங்களுக்கு எழுதுகின்றேன்.

யாழ்ப்பாணத்தவர்களை இந்திய மண்ணிற் கண்டதும், மகாப் பிரபுக்களென்றும், புண்ணிய புருஷர்களென்றும், திருந்திய செந்தமிழைப் பேசக் கூடியவர்களென்றும் எண்ணி, இந்திய சகோதரர்கள் இவர்களுக்கு இராஜோபசாரம் செய்த காலம் போய் விட்டது. இப்பொழுது யாழ்ப்பாணத்தவர்களைக் கண்டதும், அடி, கொத்து, வெட்டு, கூப்பிடு போலிஸ்காரனை என்று அவர்கள் சொல்லுங்காலம் வந்துவிட்டது. இந்தியாவில் முடிச்சுமாறிகளும், வழிபறிகாரரும், ரயில் திருடரும் அதிகமென்று, அங்கு போய் வந்தவர்கள், இந்திய சகோதரரைப்பற்றிக் கேவலமாகப் பேசிச் சிரித்த காலம்போய், இப்போது, யாழ்ப்பாணத்தவர்களென்றால், "எல்லாரும் திருடர்கள் கூட்டம்" என்று அவர்கள் பதிலுக்குச் சொல்லும் காலம் வந்துவிட்டது. மங்கம்மாள் சத்திரத்தில், அதன் நிர்வாகிகள், யாழ்ப்பாணத்தவர்களென்றால் முதலிடம் ஒதுக்கிக் கொடுத்து வைத்து, வேண்டிய உபசாரங்களெல்லாம்செய்துவந்தகாலம்மாறி, இப்போது யாழ்ப்பாணத்தவர்களென்றால், ஸ்திரீலோலர்களும், வெறும் திருடர்களும்தான் என்றெண்ணிக் கொண்டு, சத்திர நிர்வாகிகள் இரண்டா வாடகை அறைகூடக் கொடுக்க மறுத்துவிடுங்காலம் வந்து விட்டது. இவையெல்லாம் நான் இந்தியாவுக்குப் போய் அறிந்தவைகளல்ல; அங்கு போய் வந்த சில நாணயமான மனுஷர் விசனப்பட்டுச் சொன்னபோது கேட்டவைகள்.

இவ்வளவு மாறுதல்களெல்லாம் எப்படி வந்துவிட்டனவென்று கேட்பீர்களாக்கும். சொல்லுகிறேன் கேளுங்கள். யுத்தத்துக்கு முன் இந்தியாவுக்குப் போய் வருபவர்களை, யாத்திரைக்காகவும், ஊர் சுற்றிப் பார்க்கவும் போகும் பிரபுக்களென்றெண்ணிக் கொண்டு, இந்திய அரசாங்கம் அவர்கள் இலங்கைக்குத் திரும்பும்போது, அவர்கள் உபயோகத்துக்கு வேண்டிய சில பண்டம் பாடிகளைச் சுங்க வரியின்றி இலங்கைக்குக்கொண்டு வர அனுமதித்திருந்தார்கள். இந்திய அரசினரின் இந்தச் சலுகையைச்சாதகமாகவைத்துக்கொண்டு யுத்தம் தொடங்கியதும், இங்கே பொருள்களுக்குத் தட்டுப்பாடுஏற்படத் தொடங்க, ஒரு குறிப்பிட்ட சிலர் கூட்டங் கூட்டமாக இந்தியாவுக்குப் போகத்தொடங்கிவிட்டார்கள். சிலர் அயலான் பெண்ணைத் தன் பெண் என்று சொல்லிக்கூட அழைத்துப் போனார்கள். இப்படி இங்கே பெண் கிடையாதவர்கள், இந்தியாவில் நாடோடிகளாகத் திரியும் பெண்களைப் பிடித்து, அவர்களை விவாகஞ் செய்துகொண்டு போபவர்கள் போல இந்திய அரசாங்கத்துக்குச் சாடை காட்டித் தலைமன்னார் வரையும் அழைத்து வந்துவிட்டுப் பின் திருப்பி அனுப்பத் தொடங்கினார்கள். இப்படிப் போவோர் வருவோர் தொகை வரவர மிதமிஞ்சிப் போகவே இந்திய அரசினர் கண்விழித்து "ஓகோ இவர்கள் எல்லாரும் வியாபாரக் கள்ளர்கள்போல் இருக்கவேண்டும்" என்று எண்ணிக் கொண்டு முன் செய்திருந்த சலுகையை மெதுவாக எடுத்துவிட்டு, எல்லாரையும் கொஞ்சம் கடைக் கண்ணில் வைத்துக்கொள்ளத் தொடங்கினார்கள். உண்மையாகவே வியாபார நோக்கமாகப் போய்வந்த இத் திருட்டுக் கூட்டங்களுக்கு இது பெரும் ஏமாற்றமாய்ப் போய்விடவே, அப்பொழுதுதான் இவர்கள் தங்கள் சுயரூபத்தைக் காட்டத் தொடங்கினார்கள். திருட்டுக் கூட்டமல்லவா? அவர்கள் மூளை சும்மா இருக்கக் கூடியதா? அது சுறுசுறுப்பாய் வேலை செய்யத் தொடங்கியது.

சில ஆண்பிள்ளைகள் தங்கத்தை வாங்கி, மோதிரங்களாகவும், சங்கிலிகளாகவும், அரைஞாண்களாகவும் செய்து அணிந்துகொண்டும் வேட்டி சால்வைகளை வாங்கி உடுத்துக்கொண்டும், உடுத்துக் கசக்கிப் பெட்டியுள் அடைத்துக் கொண்டும், கொண்டுபோன பெண்கள் மூலம், பெண்களுக்கு ஆகவேண்டியவைகளைத் தேடி அணிவித்துக் கொண்டும், யாத்திரீகர்கள் போல வேஷம் போட்டுச் சுங்க அதிகாரிகளின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு வரப் பார்த்தார்கள். இதைக் கண்ட அதிகாரிகளுக்கு, ஒரு புறம் சிரிப்பும், மறுபுறம் இலங்கையிலுள்ளவர்களின் மூளையைக் கண்டு திகைப்பும் ஏற்படத் தொடங்கிவிட்டது. உடனே இந்தவகையாகக் கொண்டு வருபவைகளைக் கூடப் பறிமுதல் செய்யத் தொடங்கினார்கள். இதைக் கண்டதும் இலங்கையர் பயந்து போகக் கூடியவர்களா? "இன்னும் வேடிக்கை செய்து காட்டுகின்றோம் பாருங்கள்!" என்று சொல்பவர்களைப்போல, தங்கத்தைக் கட்டி கட்டிகளாகப் பெண்கள் மறைத்துக்கொண்டு வரத் தொடங்கினார்கள். இதையும் எதுவிதமோ மோப்பம் பிடித்து விட்ட சுங்க அதிகாரிகள், பெண்களை இருத்தி எழுப்பிச் சோதனை போட்டும், ஆண்களை நிர்வாணமாய் விட்டுப் பரிசோதித்தும் அவர்கள் களவு வழிகளைக் கண்டு பிடிக்கத் தொடங்கிவிட்டார்கள். சரி இதையும்தான் கண்டு பிடித்து விட்டீர்களே! இதற்கு என்ன செய்வீர்கள் பார்ப்போம்? என்று கேட்பவர்களைப் போல, இவர்கள் தங்கத்தைக் கட்டிகட்டிகளாக வாங்கி வாயிற்போட்டு விழுங்கி, வயிற்றிலடக்கிக் கொண்டு, ஒன்று மறியாத சாதுக் குழந்தைகளைப் போல வரத் தொடங்கினார்கள். இதையுந்தான் சுங்க அதிகாரிகள் எவ்விதம் அறிந்துவிட்டார்களோ தெரியாது. ஒவ்வொருவரையும் மண்டபத்திலடைத்து வைத்து, விரேசன மருந்து கொடுத்து, உண்மை பொய் அறிந்த பின்னரே அனுப்பத் தொடங்கினார்கள். இந்தச் சோதனையிலும் அகப்படாமற் தப்பி வந்த சிலருக்கு வயிற்றுட் கோளாறெடுக்கவே, அவர்கள் வைத்தியசாலைக்குப் போய், வயிற்றில் சத்திர சிகிச்சை செய்வித்துக் கொண்டபோது அவர்கள் வயிற்றினுள் தங்கப் பாளங்கள் காணப் பட்டனவாம்.

சிலநாட்களுக்குமுன் கொழும்பு வைத்தியசாலையில் ஒருவனுக்குச் சத்திர சிகிச்சை செய்தபோது அவன் வயிற்றில் இரண்டாயிரம் ரூபாவுக்கு மேற் பெறுமதியான தங்கப் பாளங்கள் காணப்பட்டனவென்ற புதினத்தை நீங்கள் பத்திரிகையில் படித்திருப்பீர்களல்லவா? எவ்வளவு பொருளாசை பாருங்கள்! உயிரைக் கொடுத்தும் மானத்தை விற்றும் பொருளைத் தேடப்பார்க்கின்றார்கள் இலங்கையர்கள். இவர்களின் இந்த இழிவான செய்கைகளைக் கண்டபின்பும் இந்திய சகோதரர்கள் எங்களை மதிப்பார்களா? அரைக் காசுக்குப் பறிபோன மானத்தை ஆயிரம் காசுகொடுத்தும் மீட்கமுடியுமா? இலங்கையரை அதுவும் யாழ்ப்பாணத்தவர்களை அவர்கள் துரும்பாய் மதிக்கத் தொடங்கிவிட்டார்கள்.

இந்தப் பொருளாசை பிடித்த பேய்மக்கள் கூட்டத்தில், இலங்கையரின், பிரதானமாய் யாழ்ப்பாணத்தவரின், மானத்தைப் போக்கிய கசடர்கள் கூட்டத்தில் யார்யாரைப் பங்குபற்றாதவர்கள் என்று விலக்கி வைக்கலாமென்று எனக்குத் தெரியவில்லை. திருச்செந்தூருக்கு, சிதம்பரத்துக்கு என்று சாட்டு வைத்துக்கொண்டு உபாத்தியாயர்களும், ஊர்பார்க்க, க்ஷேத்திர தரிசனைசெய்ய, வைத்திய சிகிச்சை செய்யவென்று சொல்லிக்கொண்டு, புரக்டர் அட்வக்கேட்' மாரும் பிறரும், தங்கள் பெண்டுபிள்ளைகள் சகிதமாய்த் துரைமக்கள் போலப் போய்க் கள்ளப் பொருட்கள் கொண்டு வருவதில் கச்சை கட்டிக்கொண்டு நிற்கின்றார்களென்றால், வியாபாரத்தையே தம் பிறவித் தொழிலாக வைத்துக் கொண்டு, பிறரைக் கொள்ளையடிப்பதையே கருத்தாகவுடைய வியாபாரிகளை நாம் குறைகூறமுடியுமா?

புகையிரத மார்க்கமாகப்போகும் இந்தத் திருட்டுக் கூட்டம் இந்த வகையாக யாழ்ப்பாணத்தவரின் மானத்தை வாங்கி வர, வல்வெட்டித்துறை, பலாலி, மாதகல், முதலிய இடங்களிலிருந்து, சிறு தோணிகளிலும், உருக்களிலும், கட்டுமரங்களிலும் போய், அரிசி, அபின், கஞ்சா, ரயர், சிகரெட், துணி மணி முதலிய வகைகளைக் கொண்டு வந்து, பிடிக்கப்போகும் சுங்க அதிகாரிகளை வெட்டியும் சுட்டும் சண்டித்தனம் செய்யும் இன்னொருவகைத் திருட்டுக் கூட்டமும் நம் மானத்தைப் போக்கி வருகின்றது. இத்திருட்டுக் கூட்டங்களுக்குப் பண உதவி செய்து, கள்ளப் பொருள்களை எடுப்பிப்பதில் இங்குள்ள தமிழ் ஆசிரியர்கள் பலர் பெரும் பங்கெடுத்துக் கொண்டிருக்கின்றார்களென்று கேள்வி.

யாழ்ப்பாணத்தவர்சிலரின் இவ்வகையான சீர்கேடான முறைகளை இந்திய மக்கள் அறிய அறிய யாழ்ப்பாணத்தவர்களிற் கொண்ட மதிப்பையும், நம்பிக்கையையும் இப்பொழுது குறைத்துக் கொண்டார்களென்றும் வியாபார நோக்கமேயில்லாது, வேறு காரணங்களின் நிமித்தமாகப் போபவர்களைக் கூட இந்திய சகோதரர்கள் திருட்டுக் கருத்தோடு பார்க்கத் தொடங்கி விட்டார்களென்றும் நான் அறிவதாற்தான், நீங்களும், இந்தியாவுக்குப் போகுங் காலங்களில், உங்கள் மானத்தைப் பறிகொடாது திரும்பி வந்துவிடவேண்டுமென்ற நோக்கங் கொண்டு முன்கூட்டியே இதை உங்களுக்கு அறிவித்துவைத்து விடுகின்றேன்.

---


## யாழ்ப்பாணம் ஐக்கிய லாப நிதி

**1918-ம் ஆ ஸ்தாபிதமானது.**

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம்

ரூபா 34,36700. 100ரூபா விகிதமான 8000 பங்குகள்

**பங்குப்பணங் கட்டுமுறை:**
மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாதந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

**தினசரிப் பற்று வரவு:**
எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்:**
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1விகிதம், 2 விகிதம், 4 விகிதம், 6விகிதமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்:**
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும்.
இந்தியா நோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

**கடன்:**
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.


வேண்டிய விபரங்களை என்மூலம் அறிந்து கொள்ளலாம்.

**S. கனகசபை**
சிறுப்பர்

(2618)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நற் சுகத்திற்கு




எங்களிடம் P. S. R. சந்தனாதித் தைல வகைகளும் விற்பனைக் கிருக்கின்றன.

[2575]


## 202-வது இலக்க புடவைக் கட்டுப்பாட்டு அறிவித்தல்

### உள்ளூரில் செய்யப்பட்ட ஷேட்டுகள்

இன்று துவக்கி இரண்டு கிழமைக்குள் மொத்த வியாபாரத்தையுடையோர் இறக்குமதியாக்கப்பட்ட துணிகளிலிருந்து உள்நாட்டிற் செய்யப்பட்டுத் தங்களிடம் உள்ள ஷேட்டுகளின் விபரக் குறிப்பு ஒன்று கீழே தரப்படுவனவற்றை அடக்கியதாகக் கொடுக்கும்படி கேட்கப்படுகிறார்கள். விபரங்களாவன: பட்டியல் எது என்பது? அதாவது இறக்குமதியாக்கப்பட்ட அல்லது உள்ளூரில் கொள்முதல் செய்யப்பட்ட விபரங்களைக் குறிக்கும் பட்டியல்(இன்வாய்ஸ்) துணி எவ் அளவு என்பது, துணி வத்திரையில் ஷேட் ஆக்கப்பட்டது, செய்யப்பட்ட ஷேட்டுகளின் தொகை, விற்கப்படாது எஞ்சியிருக்கும் ஷேட்டுகளின் தொகை என்பனவாம்.

2. கொள்முதல் செய்யப்பட்ட திகதி, ஆரிடம் கொள்முதல் செய்யப்பட்டது. கொள்முதல் செய்யப்பட்ட ஷேட்டுகளின் தொகை, கொடுத்த கூப்பன்களின் தொகை, விற்கப்படாது இருக்கின்ற ஷேட்டுகளின் தொகை ஆகிய விபரங்கள் அடங்கிய குறிப்பு உள்நாட்டில் செய்யப்பட்ட ஷேட்டுகளை வைத்திருக்கும் சில்லறை வியாபாரிகளால் இரண்டு கிழமைக்குள் எமக்கு அனுப்பப்படவேண்டும்.

ஈ. ரெருட்றிக்கோ
புடவைக் கட்டுப்பாட்டதிகாரி

கொழும்பு 31-1-46 [2638]

## ஸ்ரீ சிவபாதசுந்தரம் தம்பதிகள்

கொழும்பு வானொலி நிலையத்தைச் சேர்ந்த ஸ்ரீ சிவபாதசுந்தரமும் அவர் பாரியாரும் தங்கள் 'தேன்மதி' யைப் பங்களூரிற் கழித்துவிட்டு, இன்று சென்னையிலிருந்து விமான மார்க்கமாகக் கொழும்புக்கு வருவார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

## இலக்கிய மலர்ச்சி

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பாரதியார் மேதையை, ஒரு எல்லை கோலி. அதை அதற்குள் அடைத்துவிட முடியாது. காலம் போகப்போக, தமிழர்கள் முன்னேற்றம் அடைய அடைய, பாரதியாரின் கவிதையின் பெருமை வெளியாகும். அதை உலகம் அனுபவிக்கும்.

பாரதியார், காந்தி பஞ்சகம் பாடி, காந்திஜியின் சத்தியாக்கிரகத்தை வரவேற்றிருக்கிறார், அந்த ஐந்து பாடல்களுக்கு இணையாக, இந்தியாவில் வேறு எந்த மாகாணத்திலும் இருக்குமோ என்பது என் சந்தேகம். கிராமத்தார்கள்சொல்லுவது போல காந்தி பஞ்சகத்துக்கு அக்ஷர லக்ஷம் கொடுக்கலாம்.

### மறுமலர்ச்சி ஆரம்பம்

பாரதியார் துவக்கின மறுமலர்ச்சி செழித்து வளர்ந்துகொண்டே வருகிறது. மக்களின் சுதந்திர தாகம், இந்த மறுமலர்ச்சிக்கு முக்கியமான துணையாக அமைந்துநிற்கிறது.

தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிக்கு மக்களின் சுதந்திரதாகம் பெரிய தூண்டுதல் என்றேன். அந்தத் தாகத்தால் நேர்ந்த போராட்டத்தில் தோன்றிய சில அருமையான சம்பவங்கள், தமிழர்களின் உள்ளத்தை மிகுதியும் கலக்கி, இலக்கிய அபிவிருத்திக்குத் தூண்டுதலாக நின்றன.

இவைகளில் சில நிகழ்ச்சிகளைக் குறிப்பிடுகிறேன். தோட்டா இருக்கும் வரையில் சுட்டேன் என்று இராதகன்டயர் மிருகப்பிராய உணர்ச்சியோடு சொன்னது, ஒரு தூண்டுதல். காந்திஜீயின் 1930-ம் வருஷ உப்பு சத்தியாக்கிரகம் இன்னொன்று. தெரு வீதிகளில், சட்டியை வைத்து, தீ மூட்டி, ஆணோடு பெண் போட்டி போட்டுக்கொண்டு உப்புக் காய்ச்சின காட்சிகள் மக்களின் மனதில் எப்படி பதிந்தன என்று வார்த்தைகளால் வர்ணித்துச் சொல்லமுடியாது.

எரவாடா சிறையில், காந்திஜி இருந்த உபவாசம், காந்திஜியின் ராட்டைப் பித்தைக் கேலி செய்து, அஹிம்சை தத்துவத்தை அலட்சியமாகப் பேசிய குருதேவ ரவீந்திரர், வங்காளத்திலிருந்தும் ஓடோடியும் ஓடி வந்து எரவாடா சிறையில் மாமரத்தின் அடியில் வீற்றிருந்த மகாத்மாவின் பாதத்தில் விழுந்து வணங்கிய காட்சி, தேவர்கள் பார்த்துப் பெருமைப்பட வேண்டிய ஒன்ருகும். அந்த உபவாசம், இந்திய மக்களின் உள்ளத்தை வெகுவாகக் கலக்கி விட்டது.

சமீபத்தில் நேர்ந்த ஒன்று, இலக்கிய மறு மலர்ச்சியைத் துரிதப்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை.

கொஹிகா இம்பாலில் புல்லைத் தின்று போராடிய இந்திய ராணுவப்படை சரணடைந்தால் சாப்பாடு கிடைக்கும் என்று இறுமாப்புடன் பேசிய பிரிட்டிஷ் ராணுவ அதிகாரிக்கு என்ன பதில் கிடைத்தது? புல்லைத் தின்று மடிந்தாலும் மடிவோம் சாப்பாட்டுக்காக சரண் அடைய மாட்டோம்' என்று பதில் கிடைத்தது. காப்டன் ஷாநாவாஸ் இந்த மாதிரி சமீபத்தில் சொன்னது உங்களுக்கு நினைவு இருக்கலாம்.

இதுவும் மற்ற சம்பவங்களோடு சேர்ந்து இலக்கியிலும் வாழ்க்கையிலும் மறுமலர்ச்சி உணர்ச்சியை வேகப்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை.

தமிழ்மொழி வாழ்க!!


NATIONALIST TAMIL WEEKLY

# THE EELAKESARI

Largest and most Influential Circulation in Ceylon & India

Vol. 16 | Chunnakam, Sunday Feb., 10, 1946 | No. 28


## உடுத்துறை பாரதி இலவச வாசிகசாலை

### மாகாண அதிபர் திறந்துவைத்தார்

இம்மாதம் 3ந் திகதி மாலை 4 மணிக்கு வடமாகாண அதிபர் ஸ்ரீ. C. குமாரசாமி, C. C. S, அவர்கள் மேற்படி வாசிகசாலையைத் திறந்துவைத்தார். உடுத்துறைக் கடற்கரையில் தலைவர் திரு. க. வே. கந்தையா அவர்கள் மாகாண அதிபரை மாலையிட்டு வரவேற்றார்.

அப்பால் நியாயதுரந்தரர் ஸ்ரீ C. தருமகுலசிங்கம் அவர்களது தலைமையில் பகிரங்கக் கூட்டம் நிகழ்ந்தது.

மருதங்கேணி வத்திராயன் உடுத்துறை ஆளியவளை என்னும் கிராமவாசிகளின் சார்பாக ஒரு வரவேற்புப் பத்திரத்தை ஆசிரியர் க. பே. முத்தையா அளித்தார்.

பின்னர் ஸ்ரீ P. சவரிமுத்து B, A. அவர்கள் கல்வியைப்பற்றிப் பேசினார்கள். வடமாகாண அதிபர் யாவற்றையும் தாம் அநுதாபத்துடன் கவனிப்பதாகக் கூறிக் குறித்த வாசிகசாலை ஒரு வெளிச்ச வீடு போல் நிலவ வேண்டுமென ஆசீர்வதித்துத் திறந்துவைத்தார்.

## மட்டக்களப்பு ஆசிரியர் சங்கம்

கடந்த சனிவாரம் (2-2-46) காலை 9-15 மணிக்கு அரசாங்க சபைப் பிரதிநிதி திரு. V. நல்லையா B. A., தலைமையில் மேற்படி சங்கம் கூடியது.

8--12--45-ல் இவ்வுலக வாழ்வை ஒழித்த ஆசிரியர் உயர் திரு J. K. பூபாலபிள்ளை யவர்களின் குணநலங்களை யிட்டுப் பேசி அனுதாபத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

துன்ப நிலையிலிருக்கும் அவ்வாசிரியரின் குடும்பத்துக்கு ஒரு நிதி திரட்டிக் கொடுப்பது என்னும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு அதற்கு ஓர் சபையும் நியமிக்கப் பட்டது.

இந்நிதிக்கு ஆசிரியர் ஒவ்வொருவரும் தம்மாலான உதவி புரிதல் அவசியம். பணம் அனுப்புபவர்கள் திருவாளர் க. கணபதிப்பிள்ளை, தனாதிகாரி, 22 அங்கிள் ரோட்டு, மட்டக்களப்பு. என்ற விலாசத்துக் கனுப்பும்படி வேண்டப்படுகின்றனர்,

## ஸ்கந்தவரோதயக்கல்லூரி சுன்னுகம்

பின்னூற் காட்டப்படுவோர் மேற்படி வித்தியாசாலையில் ஆசிரியர்களாகப் புதிதாகச் சேர்ந்துள்ளார்.

ஸ்ரீமதி, இராணி S. சத்தியநாதன் B. A. (Madras) M. A. (Tronto) இவர் முன் உடுவில் மகளிர் வித்தியாசாலையில் ஆசிரியராகவிருந்தார். பின் அமரிக்கா சென்று ரொன்ரோ சர்வகலாசாலையில் ஆங்கிலத்தில் M. A. பட்டம் பெற்றவர். திரு. M. கோபாலகிருஷ்ணன். B. A. (Hons.) இவர் கோயமுத்தூர் விவசாயக்கல்லூரியில் ஆசிரியராக விருந்தவர். திரு S. நவரத்தினராஜா B. Sc. (London)

## மட்டக்களப்பில் விவேகாநந்த ஜயந்தி

சென்ற 27-1-46 பி. ப. 6-15 மணி தொடக்கம் மட்டக்களப்பு திருத்தொண்டர் கழகத்தின் சார்பில் விவேகாநந்த ஜயந்தி ஆனைப்பந்தி விவேகாநந்த வித்தியாலய மண்டபத்தில் கொண்டாடப்பட்டது. அன்று கல்லடி உப்போடை சிவாநந்த வித்தியாலயத்திலிருந்து சுவாமி ஜீயினுடைய திருவுருவச் சிலை பஜனைக்கோஷ்டியுடன் புளியந்தீவுப்பட்டணத்தினூடே ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு மாலை 6-15 மணிக்கு மண்டபத்தையடைந்தது. அப்பால் அரசாங்கசபை அங்கத்தவர் திரு. V. நல்லையா அவர்கள் தலைமையில் கூட்டம் ஆரம்பமாயிற்று. தலைமைப் பேருரையின் பின்னர் முறையே செல்வி A. கந்தவனம் அவர்கள், விவேகாநந்தர்-பெண்களுக்கு" எனும் பொருள் பற்றியும், ஸ்ரீ V. சாமித்தம்பி ஆசிரியர் அவர்கள் "விவேகாநந்தர்" என்பது பற்றியும்; ஸ்ரீ S. T. சிவநாயகம் அவர்கள், "கல்வி-அவர் சொல்வதென்ன" எனும் பொருள் பற்றியும் சொற்பொழிவாற்றினர்.

## திருகோணமலையில் விவேகானந்தர் ஜயந்தி

திருகோணமலை இந்துக் கல்லூரி மண்டபத்தில் 3-2-46 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு பகுதி நீதிபதி திரு. P. ஸ்ரீஸ்கந்தராசா அவர்கள் தலைமையில் சுவாமி விவேகானந்தர் ஜயந்தி விழா கொண்டாடப்பட்டது.

பட்டினசங்கத் தலைவர், திரு. S. M. மாணிக்கராசா, திரு. V. கணபதிப்பிள்ளை (உணவுக் கட்டுப்பாட்டதிகாரி), ஸ்ரீமத் சுவாமி நடராஜானந்தா, இந்துக் கல்லூரி அதிபர்: திரு. P. இராமச்சந்திரா, இந்துக்கல்லூரித் தலைமைத் தமிழ்ப் பண்டிதர்: திரு. ஐ. சரவணமுத்து என்பவர்களால் சுவாமியின் சேவைகளையிட்டு அரிய விரிவுரைகள் நிகழ்த்தப்பட்டன. ஸ்ரீமத்சுவாமி நடராஜானந்தா பேசுகையில் குறிப்பிட்டதாவது: "இந்தியாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சிக்குச் சுவாமி விவேகானந்தரின் "சிக்காக்கோ பிரசங்கமே" காரணம் என்றும், இந்திய தேசீய காங்கிரஸின் தந்தை சுவாமி விவேகானந்தரே என்றும் எடுத்துக் காட்டினர். திரு. கோ. இராஜகோபாலன் அவர்களால் தேசீய கீதம் பாடப்பட்டது.

## சிங்கப்பூர் இந்தியருக்கு மரண தண்டனை

சிங்கப்பூரில் ஜப்பானிய ரகசியப் போலிஸுக்குத் துப்புக் கூறிய டோரீன் வேல்ஸ் டி சில்வாவுக்கும் இவரது கணவர் மான்யூவல் டிசில்வாவுக்கும் பிரிட்டிஷ இராணுவக் கோடு இம்மாதம் 7ந்தேதி மரண தண்டனை விதித்தது. இவ்விருவரும் இந்தியாவிலுள்ள கோவா என்ற நகரத்தைச் சேர்ந்தவர்கள்.

## 203-வது இலக்க புடவைக் கட்டுப்பாட்டு அறிவித்தல்

198-ம் இலக்கப் புடவைக் கட்டுப்பாட்டு அறிவித்தலை ஒட்டி பின்வரும் மொத்த வியாபாரிகளும் பங்கீட்டுக்கு நியமனமாகி இருக்கிறார்கள். முந்திய பெயர்களுடன் இவற்றையும் சேர்த்துக் கொள்க.

| இட எல்லை | பங்கீடுசெய்யும் வியாபாரியின் பெயர் | வியாபாரம் செய்யுந் திகதி |
|---|---|---|
| கண்டி | மெஸர்ஸ். மட்ருஸ் பழையகாட் | புதன்கிழமை காலை 9 |
| ஹற்றன் | ,, N.V.N வீரண்ணரெட்டியார் | வியாழக்கிழமை ,, 9 |
| மாத்தளை | ,, A.M முகமது அப்துல்காதர் | வெள்ளிக்கிழமை ,, 9 |
| இரத்தினபுரி | ,, மன்சூர் அன்ட் கோ | புதன்கிழமை ,, 9 |

ஈ. ரெருட்றிக்கோ
புடவைக் கட்டுப்பாட்டதிகாரி

கொழும்பு, 1-2-46. [2639]

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம்-மயிலிட்டிதெற்கு 'திருமகள் நிலயம்' நா. பொன்னையா அவர்களால், சுன்னுகம், திருமகள் அழுத்தகத்தில் 1946 பிப்ரவரி 10உ ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளிவிடப்பெற்றது.






## — ஒவ்வொன்று எவ்வளவு செலவுள்ளது

ஆம். இம்மாதிரியாகச் செய்ய விடுவீர்களாளுல் அந்த வண்ணான் உங்களை நஷ்டத்திற்குள்ளாக்குவான். இந்தக்காலத்து விலையில், அவன் கிழிக்கும் பொருள்களுக்குப் பதிலாக வாங்குவதற்கு உங்களுக்கு எவ்வளவு செலவாகுமென்பதை யோசித்துப்பாருங்கள். அவனின் நாசமாக்கும் முறையை இனிமேலும் பொறுத்துக்கொண்டிருக்கவேண்டாம். ஆடைகளையும், வீட்டு உடைகளையும், சிறிதளவேனும் பழுது ஏற்படும் என்ற ஐயமின்றி, 'சன்லைட் சோப்பை உபயோகித்து மிச்சம்பிடிக்கும் முறை'யால் அழகாகத் தோய்த்துவிடமுடியும். அது ஒரு மிருதுவான முறை; அடிக்கத்தேவையில்லை; கடினமாகத் தேய்க்கவேண்டியதில்லை கீழே குறிப்பிட்டிருக்கும் சாதாரண விவரங்களை வாசிக்கவும்.

உங்கள் வேலைக்காரனுக்குச் 'சன்லைட் சோப்பை உபயோகித்துப் பணத்தை மிச்சப்படுத்தும்' முறையைக் கற்பியுங்கள்



1. ஆடைகளைத் தண்ணீரில் நன்ருக ஊறவையுங்கள்.
2. ஆடைகள்மீது — அழுக்குப் படிந்த இடத்தில் மேலதிகமாக — சன்லைட்டை நன்ருகத் தேய்க்கவும்.
3. சோப் ஆடைகளுள் செறியும்படி மிருதுவாகத் தப்புதல்வேண்டும். அவைகளை அடிக்கவேண்டாம். சன்லைட்டின் 'சுய ஆற்றலுள்ள' நுரைஅழுக்கை இளக்கிஎடுத்துவிடும்.
4. நன்ருக அலசிக்கழுவவும். அழுக்கு சன்லைட் நுரையிலேயே இருக்கிறபடியால் அலசிக்கழுவிவிடவும். நன்கு அழுக்கடைந்த ஆடைக்குத் திரும்பவும் சோப் போடவேண்டும்




# சன்லைட்சோப்

## ஆடைகளைப் பாதுகாக்கின்றது

S. 73-162 LEVER BROTHERS (CEYLON) LIMITED


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org